
செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-3-0

(108)



ஜெயகாந்தன்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/151-%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D-1934

செந்தமிழ்சிறப்பிகள்

ஜெயகாந்தன் (1934 - 2015)



அறிமுகம்

ஜெயகாந்தன் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். இந்திய அரசின் இலக்கியத்திற்கான உயர்ந்த விருதான ஞான பீட விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர். இவருடைய படைப்பிலக்கியக் களம் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், திரைப்படங்கள் எனப் பரந்து இருக்கின்றது.

வாழ்க்கைக் குறிப்பு

ஜெயகாந்தன் 1934-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் என்ற ஊரில், ஒரு வேளாண் குடும்பத்தில் தண்டபாணிப் பிள்ளை, மகாலெட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

பள்ளிப்படிப்பில் நாட்டம் இல்லாமையால், ஐந்தாம் வகுப்பிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். அவரது இலக்கிய வாழ்க்கை 1950களில் தொடங்கியது - சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. ஜெயகாந்தன் சில ஆண்டுகள், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். இவரது நாவல்களான "உன்னைப் போல் ஒருவன்" மற்றும் "சில நேரங்களில் சில மனிதர்கள்" ஆகியவை படமாக்கப்பட்டன. இதில் "உன்னைப் போல் ஒருவன்" சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதைப் பெற்றது.

படைப்புகள்

தன் வரலாறு,

ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் (அக்டோபர் 1974)
வாழ்விக்க வந்த காந்தி 1973

ஒரு கதாசிரியனின் கதை

நாவல்கள் மற்றும் குறுநாவல்கள்

- வாழ்க்கை அழைக்கிறது (ஆகஸ்ட் 1957)
- கைவிலங்கு (ஜனவரி 1961)
- யாருக்காக அழுதான்? (பெப்ரவரி 1962)
- பிரம்ம உபதேசம் (மே 1963)
- பிரியாலயம் (ஆகஸ்ட் 1965)
- கருணையினால் அல்ல (நவம்பர் 1965)
- பாரீசுக்குப் போ! (டிசம்பர் 1966)
- கோகிலா என்ன செய்துவிட்டாள்? (நவம்பர் 1967)

- சில நேரங்களில் சில மனிதர்கள் (ஜூன் 1970)
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் (ஜனவரி 1971)
- ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் (ஏப்ரல் 1973)
- ஜெய ஜெய சங்கர... (செப்டம்பர் 1977)
- கங்கை எங்கே போகிறாள் (டிசம்பர் 1978)
- ஒரு குடும்பத்தில் நடக்கிறது... (ஜனவரி 1979)
- பாவம், இவள் ஒரு பாப்பாத்தி! (மார்ச் 1979)
- எங்கெங்கு காணினும்... (மே 1979)
- ஊருக்கு நூறு பேர் (ஜூன் 1979)
- கரிக்கோடுகள் (ஜூலை 1979)
- மூங்கில் காட்டினுள்ளே (செப்டம்பர் 1979)

திரைப்படமாக்கப்பட்ட இவருடைய கதைகள்

சில நேரங்களில் சில மனிதர்கள் (இயக்குநர் : பீம்சிங்)

ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் (இயக்குநர் : பீம்சிங்)

ஊருக்கு நூறு பேர் (இயக்குநர் : லெனின்)


விருதுகள்

- சாகித்திய அகாதமி விருது
- 2002-ம் ஆண்டுக்கான ஞான பீட விருது
- 2009-ம் ஆண்டின் இலக்கியத்துறைக்கான பத்ம பூஷன் விருது
- ரஷ்ய விருது

(😊)(😊)(😊)@@@@@(😊)(😊)(😊)

ஜெயகாந்தன் - அறிமுகம்

https://www.tamilvu.org/courses/degree/p101/p1011/html/p1011661.htm



தமிழ் மக்களின் இலக்கிய ரசனையையும் சிந்தனையையும் பாதித்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தனும் ஒருவர். இவர் நவீன இலக்கியம், அரசியல், கலை மற்றும் பத்திரிகை உலகில் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்பட்டு வருபவர். தமிழ்ச் சிறுகதை உலகில், இன்றுள்ள காலக் கட்டத்தை ஜெயகாந்தனின் காலம் என்று குறிப்பிடும் அளவிற்கு ஜெயகாந்தன் கதைகள் இலக்கியத் தரமும், ஜனரஞ்சகமும் உடையனவாகத் திகழ்கின்றன.

6.1.1 பிறப்பும் வளர்ப்பும்

ஜெயகாந்தன் தென்னார்க்காடு மாவட்டம் கடலூரில் மஞ்சக்குப்பம் என்ற ஊரில் 1933ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் நாள் பிறந்தார். ஜெயகாந்தனின் தந்தை பெயர் தண்டபாணிப் பிள்ளை, தாயார் மகாலெட்சுமி அம்மாள். பத்து வயதுச் சிறுவனாக இருக்கும் போதே மூவர்ணக் கொடி பிடித்து, பாரதியாரின் தேசிய எழுச்சி மிக்க பாடல்களைப் பாடிக்கொண்டு தெருவில் சென்றவர் அவர். ஜெயகாந்தன் பள்ளி சென்று கல்வி பயின்றவர் அல்லர். தம்முடைய பதினான்காவது வயதிலேயே சொந்த ஊரை விட்டுச் சென்னைக்கு வந்தார். சௌபாக்கியம் என்ற இதழில் ஆசிரியராக இருந்த பி.சி.லிங்கம் என்ற புலவரிடம் தமிழ் இலக்கியம் கற்றுக் கொண்டார். பின்பு, தமிழ்ப் புலவர் க.சொக்கலிங்கத்திடம் முறையாகப் பாடம் கேட்டுத் தம் மொழியறிவை வளர்த்துக் கொண்டார். கரிச்சான் குஞ்சு என்ற புனைபெயரில் கதைகள் எழுதும் மன்னார்குடி நாராயணசாமி என்ற வைதீக பிராமணரிடம் பழகிப் பிராமண மொழியைக் கையாளுவதில் வல்லமை பெற்றார். ஜெயகாந்தன் சிறுவனாக இருக்கும் போதே கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புடையவராக இருந்ததனால் மார்க்சியச் சித்தாந்தக் கருத்தோட்டம் உடையவராக வளர்ந்தார்.

6.1.2 எழுத்துலக நுழைவு

ஜெயகாந்தன் எழுதிய முதல் சிறுகதை சௌபாக்கியம் என்ற இதழில், 1950இல் வெளிவந்தது. அது 'மாதர் நல இலாக்கா' நடத்திய பத்திரிகை ஆகும். பின்பு தொடர்ந்து வசந்தம் என்ற இதழிலும், விந்தன் நடத்திய மனிதன் இதழிலும், இஸ்மத் பாஷா ஆசிரியராக இருந்த சமரன் என்ற இதழிலும், மாஜினி நடத்திய தமிழன் இதழிலும், பின்னர் விஜய பாஸ்கரன் நடத்திய சரஸ்வதி இதழிலும் தொடர்ந்து எழுதினார். சரஸ்வதி இதழில் எழுதும் பொழுதுதான் இவர் எழுத்தாற்றல் வெளியுலகிற்குத் தெரிய வந்தது. அதன் பின்னர்

வெகுஜன இதழ்களான ஆனந்த விகடன், குமுதம், கல்கி என்பவற்றில் எழுதத் தொடங்கினார்.

- **எழுத்து வளர்ச்சி**

தொடக்கத்தில் ஜெயகாந்தன் எழுத்துகள் தத்துவ நோக்குடையனவாகவும் பரிசோதனை முயற்சிகளாகவும் அமைந்தன. சரஸ்வதியில் வெளியான கதைகள் பாலுணர்ச்சி பற்றிப் பேசுவன. கண்ணம்மா, போர்வை, சாளரம், தாம்பத்தியம், தர்க்கம் போன்ற கதைகள் இதற்குத் தக்க சான்றுகளாகும். இவை தரமானவை என்றாலும் ஜனரஞ்சகமாக அமையவில்லை. அதற்கு அடுத்து வந்த காலக் கட்டத்தில், அவர் தம் எழுத்துகளை ஜனரஞ்சகமாக அமைத்துக் கொண்டார். ஜெயகாந்தன் தொடக்கக் காலத்தில் சிறுகதை படைப்பதிலேயே மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்திருக்கிறார். 1958ஆம் ஆண்டு, ஒருபிடி சோறு என்ற அவருடைய முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது. விந்தனின் தமிழ்ப்பண்ணை பதிப்பகம் அதை வெளியிட்டது. தி.ஜ.ர. அத்தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியுள்ளார். அத்தொகுதிக்குக் கண்ணதாசன் கவிதையில் புகழாரம் சூட்டியுள்ளார். சிறுகதை மன்னன் என்று சுட்டும் அளவிற்கு, சிறுகதைப் படைப்புகளில் தன் திறமையை வெளிக்காட்டிக் கொண்டுள்ளார் ஜெயகாந்தன். ‘தமிழ்நாட்டில் இன்றுவரை தோன்றியுள்ள மிகச் சிறந்த எழுத்தாளர்கள் சிலருள் ஜெயகாந்தன் ஒருவர்’ என்று கு.அழகிரிசாமி குறிப்பிட்டுள்ளார். ஆனால், காலம் செல்லச் செல்ல ஜெயகாந்தன் சிறுகதை எழுதுவதைக் குறைத்துக் கொண்டு நாவல் மற்றும் குறுநாவல் படைப்பில் ஆர்வம் காட்டலானார். ஆனாலும் கூட, அவர் படைத்த சிறுகதைகள் இன்றும் அவர் புகழ்பாடிக் கொண்டிருக்கின்றன.

- **கையாண்ட இலக்கிய வகைகள்**

ஜெயகாந்தன் சிறுகதை, குறுநாவல், நாவல் என்ற இலக்கிய வடிவங்களைப் படைத்ததுடன் நின்றுவிடாமல், சுவை ததும்பும் கட்டுரைகளையும், ஆழமான அறிவுபூர்வமான கட்டுரைகளையும் படைத்துள்ளார். அவற்றில் சுயதரிசன, சுயவிமரிசனக் கட்டுரைகளும் உண்டு. மேலும் அரசியல், சமூகம், கலை இலக்கியம் மற்றும் பத்திரிகை அனுபவம் என்று கட்டுரைகளின் பொருள் விரிந்து பரந்ததாக அமைந்துள்ளது. ஜெயகாந்தன் சில ஓரங்க நாடகங்களையும் எழுதியுள்ளார். திரைப்படக் கதாசிரியராகவும், பாடலாசிரியராகவும், வசனகர்த்தாவாகவும், இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் சிறந்துள்ளார். ஜெயகாந்தன் சிறந்த மொழி பெயர்ப்புப் பணிகளையும் செய்துள்ளார். ராமன் ரோலண்ட் எழுதிய நூலை மகாத்மா என்ற பெயரிலும், புஷ்கின் எழுதிய நூலைக் கேப்டன் மகள் என்ற பெயரிலும் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அவருடைய சிறுகதைகள் மற்றும் நாவல்கள் அனைத்திந்திய மொழிகளிலும், உலக மொழிகள் பலவற்றிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும், உக்ரைன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஜெயகாந்தன் தம் சிறுகதைத் தொகுப்புகளுக்கும்

நாவலுக்கும் எழுதிய முன்னுரைகள் விமர்சனப் பார்வையில் அமைந்து சிறந்தன. அவை அனைத்தும் ஜெயகாந்தன் முன்னுரைகள் என்ற பெயரில் நூலாகத் தொகுக்கப்பட்டு 1978இல் வெளிவந்தன. ஜெயபேரிகை என்ற நாளிதழிலும், ஞானரதம், கல்பனா என்ற இலக்கிய இதழ்களிலும் இறுதியாக நவசக்தி நாளிதழிலும் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு.

6.1.3 எழுதிய நூல்கள்

https://www.storytel.com/in/authors/jayakanthan-218111?srsltid=AfmBOopRkmErFWhKujrP31LIHRtpmFNmN50JTo_N-Db-g3qfTFazCVcI

ஜெயகாந்தன் 13 சிறுகதைத் தொகுதிகளும், 25-க்கும் மேற்பட்ட குறுநாவல்களும், 17 நாவல்களும், 25 கட்டுரை நூல்களும் எழுதியுள்ளார். ஒருபிடி சோறு (1958), இனிப்பும் கரிப்பும் (1960), தேவன் வருவாரா? (1961), மாலை மயக்கம் (1962), சுமை தாங்கி (1962), யுகசந்தி (1963), உண்மை சுடும் (1964), புதிய வார்ப்புகள் (1965), சுய தரிசனம் (1967), இறந்த காலங்கள் (1969), குருபீடம் (1971), சக்கரம் நிற்பதில்லை (1975), புகை நடுவினிலே (1990), உதயம் (1996) ஆகியன ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைத் தொகுதிகளாகும். Game of Cards (1969) என்பது ஆங்கில மொழியில் வெளியான சிறுகதைத் தொகுதியாகும். ஜெயகாந்தனின் சிறுகதைகள் என்ற பெயரில் இவருடைய சிறுகதைகள் 15 அனைத்திந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, 1973இல் வெளியாகின. அதூரே மனுஷ்யா (1989) என்ற பெயரில் இந்தி மொழியில் இவருடைய மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதைத் தொகுதி வெளியாகி உள்ளது. வாழ்க்கை அழைக்கிறது ஜெயகாந்தனின் முதல் நாவலாகும். பாரிஸுக்குப் போ, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், சுந்தரகாண்டம், ஜெய ஜெய சங்கர என்பன இவருடைய புகழ்பெற்ற நாவல்களாகும். கைவிலங்கு, விழுதுகள், யாருக்காக அழுதான், ரிஷிமூலம், கோகிலா என்ன செய்துவிட்டாள், சினிமாவுக்குப் போன சித்தாளு, பாவம் இவள் ஒரு பாப்பாத்தி, வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து போன்றவை இவருடைய குறுநாவல்களுள் சிலவாகும். ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள், ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள், ஓர் இலக்கியவாதியின் பத்திரிகை அனுபவங்கள், ஒரு பிரஜையின் குரல், யோசிக்கும் வேளையில் என்பன இவருடைய கட்டுரை நூல்களுள் சிலவாகும்.

6.1.4 தனிப்பண்புகள்

ஜெயகாந்தனின் சமுதாயப் பார்வையில் மார்க்சியமும் உண்டு. ஆன்மிகமும் உண்டு. இரண்டு வேறுபட்ட தளங்களிலும் கிடைத்த அனுபவங்களை அவர் தம் கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் மார்க்சிய அரசியல் பார்வை

உடையவராக இருந்தாலும் காங்கிரசையும் விரும்பியுள்ளார். லெனினைப் போற்றும் இவர், காமராஜரையும் போற்றுகிறார். பாரதி, காந்தி, விவேகானந்தர் ஆகியோர் எழுத்துகளில் நல்ல பரிச்சயம் உடையவர். ஓங்கூர் சாமியார் என்பவரோடு தொடர்பு கொண்டு, சிலகாலம் சித்தர் மரபில் பிடிப்புக் கொண்டிருந்தார். திரைப்படத் துறையிலும் நாட்டம் கொண்டு அதில் ஈடுபட்டு விருதுகளும் பெற்றுள்ளார். அத்துடன், அவர் உரத்த ஆளுமை, விரிவான வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றவராகவும் திகழ்கிறார். இடைவிடாத படைப்பாக்கம் உடையவராகத் தனித்திறன் பெற்று விளங்குகிறார். ஜெயகாந்தனின் ஆளுமையின் பெரும் பகுதி அவருடைய புற உலகத் தொடர்பால் கிடைத்தது. ஜெயகாந்தன், ஒரு முற்போக்கு எழுத்தாளராவார். மனிதனுக்கு மனிதன் கொண்டிருக்கும் நேசம், உள நெகிழ்வு, வாழ்க்கையில் ஒருவனுக்கு இருக்கும் பற்று, ஒருவரின் துயர் போக்க மற்றொருவர் பாடுபடுவது -இதுவே முற்போக்கு எழுத்துக்கு இலக்கணம் என்று மாலை மயக்கம் சிறுகதைத் தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்விலக்கணத்திற்கு அவர் மிகப் பொருத்தமானவராகத் திகழ்கிறார். புதுமைப்பித்தனுக்கு அடுத்து ஏற்புக்கும் மறுப்புக்கும் அதிக அளவு இலக்கானவர் இவர்தான்.

6.1.5 பரிசுகளும் விருதுகளும்

1964இல் ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன் திரைப்படம் இந்திய ஜனாதிபதியின் விருதினைப் பெற்றது. 1972ஆம் ஆண்டு சில நேரங்களில் சில மனிதர்கள் நாவல் சாகித்திய அக்காதெமி விருதினைப் பெற்றது. 1978இல் அது திரைப்படமாக வெளிவந்தபோது சிறந்த திரைக்கதைக்கான தமிழக அரசின் விருதினைப் பெற்றது. அதே ஆண்டு அவரது இமயத்துக்கு அப்பால் என்ற நாவல் சோவியத் நாடு நேரு விருது பெற்றது. 1979ஆம் ஆண்டு கருணை உள்ளம் என்ற திரைப்படம் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த கதைக்கான தமிழ்நாடு அரசு விருதினைப் பெற்றது. 1986இல் ஜெய ஜெய சங்கர நாவலுக்குத் தமிழ்நாடு அரசின் சிறந்த நாவலுக்கான விருதும், சுந்தரகாண்டம் நாவலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ராஜராஜ சோழன் விருதும் கிடைத்தன. கடந்த ஓரிரு ஆண்டுகளாக சாகித்திய அக்காதெமியின் உயர் சிறப்பிற்குரிய பெல்லோசிப் என்ற இடத்தையும் பெற்றுள்ளார்.

- **ஞானபீட விருது**

2005ஆம் ஆண்டில் இந்திய இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருதான ஞானபீட விருதும் பெற்றுள்ளார். தமிழ்நாட்டில் எழுத்தாளர் அகிலனுக்குப் பிறகு இவ்விருதினைப் பெறும் சிறப்பிற்குரியவராகத் திகழ்கிறார். இவ்வாறு ஜெயகாந்தன் தமிழக அளவிலும், இந்திய அளவிலும், ஆசியக் கண்ட அளவிலும் பல விருதுகளைப் பெற்றுச் சிறந்துள்ளார். 1980, 1983, 1984 ஆம் ஆண்டுகளில்

சோவியத் ரஷிய நாட்டின் அழைப்பின் பேரில் ரஷியப் பயணம் மேற்கொண்ட சிறப்பும் இவருக்கு உண்டு.

ஜெயகாந்தன்

அறிமுகம்

ஜெயகாந்தன் அவர்கள், மிகுந்த ஆற்றலும், ஆளுமையும், வேகமும், உயர்வும், தனித்துவமும் கொண்ட தலைச்சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராவார். அவர் ஓரளவே படித்திருந்தாலும், தமிழ் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்து, தமிழ் ரசிகர்களின் நெஞ்சங்களைத் தன் எழுத்துக்களால் கொள்ளைக் கொண்டவர். ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாமல், கட்டுரையாளர், பத்திரிகையாளர், துண்டு வெளியீடுகளை எழுதுபவர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர் எனப் பல்வேறு முகங்கள் கொண்டு, தமிழ் இலக்கியத்திற்கு அருட்தொண்டாற்றியவர் ஜெயகாந்தன் என்று சொன்னால் அது மிகையாகாது. இலக்கியத்திற்காக இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதான 'ஞான பீட விருதைப்' பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். மேலும், இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பத்ம பூஷன் விருதை' தமிழ் இலக்கியத்திற்காக முதல்முறைப் பெற்றார். 'சாஹித்ய அகாடமி விருது', 'ரஷ்ய விருது' என்று பல்வேறு விருதுகளுக்குத் தகுதியான ஜெயகாந்தன் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய சாதனைகள் பற்றியறிய மேலும் தொடர்ந்து படிக்கவும்.

பிறப்பு: ஏப்ரல் 24, 1934

பிறப்பிடம், கடலூர், தமிழ்நாடு, இந்தியா

பணி: எழுத்தாளர், பத்திரிகையாளர், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர்

நாட்டுரிமை: இந்தியன்

பிறப்பு

ஜெயகாந்தன் அவர்கள், தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் இருக்கும் கடலூரில் ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி, 1934 ஆம் ஆண்டில் ஒரு வேளாண் குடும்பத்தில் பிறந்தார்.

ஆரம்ப வாழ்க்கையும், கல்வியும்

ஜெயகாந்தன் அவர்களுக்கு, சிறு வயதிலிருந்தே பள்ளிப்படிப்பில் நாட்டமில்லாமல் இருந்தது. எனவே, அவர் ஐந்தாம் வகுப்பு வரையே பள்ளிக்குச் சென்றார். இதன் காரணமாக, அவருக்கும், அவரது தந்தைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அவர் தனது தாயார் மற்றும் தாத்தாவிடம் மிகவும் நெருக்கமாக இருந்தார். வீட்டில் அவருக்கும், அவரது தந்தைக்கும் சுமூகமானப் பேச்சுவார்த்தை இல்லாமல், இருவரும் எதிரும், புதிருமாக இருந்தனர். அவர் பள்ளிச் செல்லவில்லை என்ற ஒரே காரணத்தால், அவரது தந்தை அவருக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கினார். சிறுவனாக இருந்து இதனை சற்றும் தாங்கிக் கொள்ள இயலாததால், அவர் தனது 12 வது வயதில் வீட்டை விட்டு ஓடி, விழுப்புரத்தில் உள்ள அவரது மாமாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அங்கு, அவரது மாமா அவருக்கு கம்யூனிச கொள்கைகளையும், சுப்ரமணிய பாரதி படைப்புகளையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இலக்கியம் மீது ஆர்வம்

சிறிது காலம் கழித்து, ஜெயகாந்தன் அவர்களுடைய தாயார் அவரை சென்னையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான அவரது உறவினர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தனது பிள்ளைப் பருவத்தைக் கழித்த அவர், தமிழ்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குப் பரிச்சயமானார். அக்கட்சி அலுவலகத்தைத் தனது வீடாகவும், அக்கட்சி உறுப்பினர்களைத் தனது குடும்ப அங்கத்தினர்களாகவும் கருதிய அவர், அவர்களின் கலந்துரையாடல்களைக் கேட்க கேட்க, இலக்கியத்தின் மீது அவருக்கு நாட்டம் ஏற்பட்டது. இதனால்,

கட்சியின் அங்கத்தினரான ஜீவானந்தம் என்பவர், அவருக்குத் தமிழாசிரியர் ஒருவரை அவருக்குக் கல்வி கற்றுத் தருமாறு பணியில் அமர்த்தினார். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்த அவர், பல இடங்களில் முழுநேரம் மற்றும் பகுதிநேர வேலைகளில் வேலைப் பார்த்தார். 1949ல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டதால், அக்கட்சிக்குத் தடை உத்தரவு விதிக்கப்பட்டது. இதன் பொருட்டாக, அவர் தஞ்சாவூரிலுள்ள ஒரு காலணிகள் விற்கும் கடையில் தற்காலிகமாகப் பணியில் சேர்ந்தார். அவருக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில், எழுதும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். மேலும், புதிய கட்சிகளின் வருகையால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுவதுமாக அழிந்ததால், காமராஜரின் கொள்கைகள் மீது அவருக்குப் பற்று ஏற்பட்டதால், அவரது தொண்டனாக மாறி, அவர் இருந்த தமிழகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

எழுத்துலக வாழ்க்கை

ஜெயகாந்தன் அவர்கள், அவரது இலக்கிய வாழ்க்கையை 1950களில் தொடங்கினார். பல்வேறு தினசரி மற்றும் மாத நாளிதழ்களான சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்றவற்றில் அவரது படைப்புகள் வெளியாயின. அவரது படைப்புகளனைத்தும் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றதால், அவருக்குப் புகழும், அவரது படைப்புகளுக்கு அங்கீகாரமும் கிடைத்தது. இதனால், அவர் தலைச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப்பட்டார். எழுத்துலகில் கொடிக்கட்டிப் பறந்த அவர், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். அவரது மிகவும் வெற்றிப்பெற்ற படைப்புகளான “உன்னைப் போல் ஒருவன்” மற்றும் “சில நேரங்களில் சில மனிதர்கள்” போன்ற நாவல்கள் படமாக்கப்பட்டன. “உன்னைப் போல் ஒருவன்” என்ற படம், சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான ‘குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதான பத்ம பூஷன் விருதை’ பெற்றது.

அவரது படைப்புகள்

ஜெயகாந்தன் அவர்கள், பல்வேறு வாழ்க்கை வரலாறு, நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள் தொகுப்பு, கட்டுரைகள், போன்றவற்றைப் படைத்துள்ளார். அதில் சில குறிப்பிடத்தக்கப் படைப்புகள்:

'வாழ்விக்க வந்த காந்தி 1973', 'ஒரு கதாசிரியனின் கதை', 'பிரம்ம உபதேசம்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்', 'சினிமாவுக்குப் போன சித்தாளு', 'கண்ணன்', 'உன்னைப் போல் ஒருவன்', 'ரிஷிமூலம்', 'கருணையினால் அல்ல', 'கங்கை எங்கே போகிறாள்', 'ஒவ்வொரு கூரைக்கும் கீழே…', 'சுந்தர காண்டம்' மற்றும் பல.

தமிழ்த் திரையுலகில் இவருடைய கதைகள் பல திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டன. அவை: 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'ஊருக்கு நூறு பேர்', 'உன்னைப் போல் ஒருவன்', 'யாருக்காக அழுதான்', மற்றும் 'புதுச் செருப்பு'.

அவர் இயக்கிய திரைப்படங்கள்: 'உன்னைப் போல் ஒருவன்', 'யாருக்காக அழுதான்', மற்றும் 'புதுச்செருப்பு கடிக்கும்'.

விருதுகள்

- 1972 – சாஹித்ய அகாடமி விருது
- 2002 – இலக்கியத்திற்காக இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதான 'ஞான பீட விருதைப்' பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர்.
- 2009 – இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பத்ம பூஷன் விருதை', இலக்கியத்துறைக்காக முதல்முறை வென்றார்.
- 2011 – ரஷ்ய விருது

காலவரிசை

1934: தமிழ்நாட்டில் இருக்கும் கடலூரில் ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி, 1934 ஆம் ஆண்டில் ஒரு வேளாண் குடும்பத்தில் பிறந்தார்.
1950: அவரது இலக்கிய வாழ்க்கையை 1950களில் தொடங்கினார்.
2002: இலக்கியத்திற்காக இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதான 'ஞான பீட விருதைப்' பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர்.
2009: இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பத்ம பூஷன் விருதை', இலக்கியத்துறைக்காக முதல்முறை வென்றார்.

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-apr25/48056-2025-04-24-04-40-48

ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம்

ஆர்.பிரமிளா & கோ.சுரேஷ்

தொடக்கக் காலத்தில் ஜெயக்காந்தனின் எழுத்துக்கள் தத்துவ நோக்கத்தை ஆராயும் விதத்தில் அமைந்தது.

'சரஸ்வதி' எனும் இதழில் வெளியான அவருடைய கதைகள் பாலுணர்ச்சி குறித்துப் பேசுவதாக வெளிவந்தது. அதற்குத் தக்கச் சான்றுகளாக 'கண்ணம்மா, போர்வை, சாளரம், தாம்பத்தியம், தர்க்கம்' போன்ற கதைகளைச் சொல்லலாம். இவைகள் பேசும் பொருளாக அமைந்தது என்றாலும் மக்கள் விரும்பத்தக்க வகையில்

அமையவில்லை எனலாம். அதற்கடுத்து வந்த காலக்கட்டத்தில் அவர் தம் எழுத்துக்களை மக்கள் விரும்பும் வகையில் அமைத்துக் கொண்டார். ஜெயகாந்தன் அவர்கள் ஆரம்பக் காலத்தில் சிறுகதைப் படைப்பதிலேயே மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்திருக்கின்றார்.



1958-ஆம் ஆண்டு 'ஒரு பிடி சோறு' என்ற அவருடைய முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது. விந்தனின் தமிழ்ப் பண்ணைப் பதிப்பகம் அதனை வெளியிட்டது. எழுத்தாளர் தி.ஜானகிராமன் அவர்கள் அத்தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியதும், கண்ணதாசன் அவர்கள் புகழாரம் சூட்டியதும் அந்நூலிற்கு மேலும் பெருமை சேர்த்தது எனலாம். அதன்பிறகு தொடர் சிறுகதைகளை வெளியிட்டுச் ‘சிறுகதை மன்னன்' என்றும் பாராட்டும் அளவிற்கு சிறுகதைப்

படைப்புகளில் தன் திறமையை வெளிக்கொணர்ந்தவர். தமிழ்நாட்டில் இன்று வரை தோன்றியுள்ள மிகச்சிறந்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தனும் ஒருவர் என்று கு.அழகிரிசாமி குறிப்பிட்டுள்ளார். ஆனால் காலம் செல்லச் செல்ல ஜெயகாந்தன் சிறுகதை எழுதுவதைக் குறைத்துக் கொண்டு நாவல் மற்றும் குறுநாவல்கள் படைப்பதில் ஆர்வம் காட்டலானார். இருப்பினும் அவரது சிறுகதைகள் இன்றும் அவர் புகழ்பாடிக் கொண்டிருக்கின்றன.

ஜெயகாந்தன் 17 சிறுகதைத் தொகுதிகளையும், 25-க்கும் மேற்பட்ட குறுநாவல்களையும், 17 நாவல்களையும், 25 கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

ஜெயகாந்தன் பெற்ற பரிசுகளும், விருதுகளும்:

1964 இல் ஜெயக்காந்தனின் ‘உன்னைப் போல் ஒருவன்' திரைப்படம் இந்திய ஜனாதிபதி விருதைப் பெற்றது. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல் 1972 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருதைப் பெற்றது. 1978 இல் அந்நாவல் திரைப்படமாக வெளிவந்த போது சிறந்த திரைக்கதைக்கான தமிழக அரசின் விருதினைப் பெற்றது. அதே ஆண்டு அவரது 'இமயத்துக்கு அப்பால்' என்ற நாவல் சோவியத்நாடு நேரு விருதினைப் பெற்றது. 1979-ஆம் ஆண்;டு 'கருணை உள்ளம்' என்ற திரைப்படம் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த கதைக்கான தமிழ்நாடு அரசு விருதினைப் பெற்றது. 1986 இல் 'ஜெய ஜெய சங்கர' எனும் நாவல் தமிழ்நாடு அரசின் சிறந்த நாவலுக்கான விருதையும், சுந்தரகாண்டம் எனும் நாவல் தமிழ் பல்கலைக்கழகத்தின் இராஜராஜ சோழன் விருதையும் பெற்றார்.

2005-ஆம் ஆண்டில் இந்திய இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருதான ஞானபீட விருது இவருக்குக் கிடைக்கப்பெற்றது. தமிழ்நாட்டில் அகிலனுக்குப் பிறகு இவ்விருதைப் பெறும் சிறப்புக்குரியவராகத் திகழ்பவர் எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள். இவ்வாறு தமிழக அளவிலும் இந்திய அளவிலும் ஆசிய அளவிலும் பல பல விருதுகளைப் பெற்றுள்ளமைப் போற்றுதலுக்குரியதாகும். 1980, 1983, 1984 ஆம் ஆண்டுகளில் சோவியத் ரஷ்யா அழைப்பின் பேரில் ரஷ்யப் பயணம் மேற்கொண்ட சிறப்பும் இவருக்கு உண்டு.

பத்திரிகைத் தொடர்பு:

ஜெயகாந்தனும் முதன் முதலில் சிறுகதை ஆசிரியராக இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த போது தமிழ்ப் பத்திரிகைகள் தான் அவரை வரவேற்றது. சுதந்திரப் போராட்டக் காலக் கட்டத்திலும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து பல இலக்கியப் பத்திரிகைகள் தோன்றி தனது இலக்கியத் தொண்டை செவ்வனே புரிந்து வருகின்றன. அவ்வகையில் 'மணிக்கொடி' எனும் பத்திரிகை இதழுலகில் தனக்கான முத்திரையைப் பதித்தது குறிப்பிடத்தக்கதாகும். 'சரஸ்வதி' எனும் பத்திரிகையும் ஜெயகாந்தனுக்கு இலக்கியப் பணிபுரிய முதன்முதலாக வித்திட்ட களம் ஆகும். சௌபாக்கியம், தாமரை, சாந்தி, கல்வி, ஆனந்த விகடன், தினமணிக்கதிர் போன்ற பல பத்திரிகைகளிலும் தனது தொடர் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

பெண்களின் நிலை:

நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களே விளிம்புநிலை மக்கள் ஆவர். அவர்களின் வாழ்க்கை என்பது அடுத்த வேளை உணவிற்கே அல்லல்படும் சூழலமைந்ததாகும். ஒண்டு குடிசையில் வாழ்வு, ஒரு வேளை கஞ்சிக்காக நாள் முழுவதும் உழைக்கும் அவலம்

இத்தகைய வாழ்க்கை வாழும் மக்களிடமும் கூட்டுக்குடும்பமாக சேர்ந்து வாழும் பண்பு உள்ளது. கணவன், மனைவி, குழந்தைகள், தாத்தா, பாட்டி என அதிக உறுப்பினர்களுடன் வாழும் குடும்ப வாழ்வு போராட்டக்களமாய் அமைந்திருப்பதை ஜெயகாந்தனின் சிறுகதைகளுள் சில விளக்குகின்றன.

விளிம்புநிலை

மக்களின் குடும்பவாழ்க்கையைச் சித்தரிக்கும் சிறுகதையாக 'ஒரு பிடி சோறு' எனும் சிறுகதை அமைகின்றது. ராசாத்தியும் அவள் மகன் மண்ணாங்கட்டி ஆகிய இருவர் மட்டுமே அவரது குடும்ப உறுப்பினர்கள் ஆவர். கூலி வேலை செய்யும் ராசாத்தி வேலை இல்லாத நாட்களில் விலைமகளாக இருக்கிறாள். குடிசையில் நடக்கும் இவர்களது வாழ்க்கை ஒரு வேளை உணவுக்கே துன்பப்படும் அளவில் உள்ளது. விறகு சுமப்பது சுமைகளை லாரியிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள். இவையும் கிடைக்காதபோது சாப்பாட்டுக்காக விபச்சாரம். இவ்வாறு வாழ்க்கை நடத்தும் குடிசை வாசிகளான இம்மக்களிடமும் உதவும் மனநிலை, மனிதநேய உணர்வு, கருணை போன்றவை இருப்பதைச் சித்தரித்துக் காட்டுகிறது.

விலைமகளுக்கு எப்பொழுதுமே ஓய்வு இல்லை. பசியோடும் அதனால் களைத்த உடலோடும், விபச்சாரத்திலும் ஈடுபட வேண்டிய அவலம்.

ஜெயகாந்தன் தனது சிறுகதையில் செல்வச் செழிப்புள்ள பணக்காரக் குடும்பங்களையும், அவற்றில் உறுப்பினராக இருக்கும் பெண்களையும் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். இப்பெண்கள் நாகரிக மாற்றங்களின் வளர்ச்சியையும் பண்பாட்டில்

பொருளாதாரத்தினால் ஏற்படும் சிதைவுகளையும் உணர்த்துபவர்களாகக் காட்சியளிக்கின்றனர்.

சீதாராமன், மதுரம் தம்பதிகள் இரண்டு பெண் குழந்தைகள் என ஓர் அன்பான குடும்பமாக கதை தொடங்குகிறது. கணவன் மீது மதுரத்திற்கு அவ்வளவு அன்பு. சீதாராமனுக்கு ஓர் முறை அலுவலகத்தில் போடப்பட்ட நாடகக்குழுவில் கதாநாயகனாக இருந்தார். அதனாலும், தனக்கு இளமையும் அழகும் இருப்பதாலும், எப்போதும் ஆணழகன் என்ற செருக்குடன் இருப்பவர். வீட்டில் அனைத்துப் பணிகளையுமே மதுரமே செய்தாள். கணவனின் அழகும் மற்றவர் அவனைப் பற்றி புகழும் கருத்துக்களும் அவளுக்கு மிக இனிமையானது.

சீதாராமனோ தன்னுடன் கதாநாயகியாய் நாடகத்தில் நடித்த கமலாவிடம் தவறாகப் பழகுகின்றான். அவள் கர்ப்பம் அடைகிறாள். சீதாராமனின் மனதில் வீட்டு நிர்வாகத்தைப் பார்த்துக்கொள்ள இரண்டு மடங்கு ஊதியம் பெற எண்ணி கமலாவை திருமணம் செய்ய மதுரத்திடம் பேசி அவளின் அனுமதியைப் பெறத் திட்டமிடுகிறான். கமலா மூலம் உண்மையை அறிந்த மதுரம் கணவனை வெறுத்து விலகுகிறாள். தன் பெற்றோர் தனக்கு கொடுத்த வீடு ஒன்றே போதுமானது என்ற முடிவில் இத்தனை நாளும் கணவன் காட்டிய அன்பு எல்லாம் பொய் என்பதை அறிந்து மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறாள்.

இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள மதுரம் என்ற பெண் பண்பாட்டுடன் வாழ்பவள். கணவனை உயிராக நினைப்பவள். ஆனால் அவன் தனக்குத் துரோகம் செய்ததை அறிந்ததும் இனி அவன் தேவையில்லை எனத் தெளிவாக முடிவெடுப்பதும், தனித்து வாழ முற்படும் தன்னம்பிக்கையோடு இருப்பதும் மதுரத்தின் மன

உறுதியை, தன்னம்பிக்கையைக் காட்டுகின்றது. இச்சிறுகதையில் மதுரத்தின் தெளிந்த அறிவால் சிந்தனையையும் அறிய முடிகின்றது. 'மதுரம்' என்ற பெண் பாத்திரம் அடிப்படைக் கல்வியை உடைய நடுத்தரப் பெண்ணாகவும், மன உறுதியுடன் தெளிவாக முடிவெடுப்பவளாகவும் படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவளுக்கு வாழ்வாதாரம் தேட வேண்டியுள்ள அவசியம். எந்நிலையிலும் பாதிப்பு அடைபவர் பெண்களே. ஆகையால் பெண் என்பவள் திருமணத்திற்கு முன் எவரையும் எதிர்பார்க்காமல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். தனது தனித்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமை என்பது கைத்தொழில், கல்வி, சுயதொழில் போன்றவற்றில் தன்னுடைய திறமையை முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

ஜெயகாந்தனின் 'யுகசந்தி' எனும் கதையில் ஆசிரியையாகத் தொழில் செய்யும் "கீதா" என்ற பெண் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. கீதா இளம் விதவை, மறுமணம் செய்து வைக்காமல் வைதீக குடும்பத்தின் வழக்கப்படி மொட்டை அடித்து, வெள்ளைப் புடவை கட்ட வேண்டிய கீதாவை அவளது பாட்டி ஆசிரியை பயிற்சி வகுப்பில் படிக்க வைக்கிறாள். படித்து ஆசிரியை ஆனபின் தன்னம்பிக்கை உடையவளாக மாறுகின்றாள். கௌரிப்பாட்டியின் உதவியால் தந்தையின் அனுமதியுடன் ஆசிரியையாகப் பணியாற்றும் கீதா தன்னுடன் பணியாற்றும் ஹிந்திபண்டிட் ராமச்சந்திரனை மறுமணம் செய்து கொள்கிறாள்.

தொழில் தரும் நம்பிக்கை:

விதவையான கீதாவிற்கு ஆசிரியர் தொழிலும், கல்வியும் தன்னம்பிக்கையைத் தருகிறது. காலங்காலமாகச் சமுதாயத்தில்

விதவைப் பெண்களுக்கென்று விதிக்கப்பட்டிருந்த கட்டுக்களை உடைத்து வெளியேறுகிறாள்.

“என்னோடு பணிபுரியும் ராமச்சந்திரன் என்பவரை வருகின்ற ஞாயிறன்று நான் பதிவுத் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்து விட்டேன். நான் விதவை என்பது அவருக்குத் தெரிந்தது தான். ஆறுமாத காலமாய் நான் எனது உணர்ச்சியோடு போராடித் தான் இம்முடிவுக்கு வந்தேன். உணர்வுப்பூர்வமான வைதவ்ய விரதத்திற்கு ஆட்பட முடியாமல் வேஷங்கட்டித் திரிந்து பிறகு அவப்பேருக்கு ஆளாகிக் குடும்பத்தையும், அவமானப்படுத்தாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கம் என்று உணர்ந்திருக்கிறேன். இந்த முப்பது வயதில் இந்த அளவு சோதனைகளையே தாங்காமல் இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பின் இதே முடிவுக்கு வர நேரிடுமோ என்ற அச்சமும் பிறந்ததே. அதான் இப்போதே சரி என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். என் காரியம் என்னைப் பொறுத்த வரைக்கும் சரியானதே!” - (ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2) - யுக சந்தி, ப.எண்: 114)

என்ற உரையாடல் வழி கீதாவின் தெளிவான சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன. இந்து சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து வரும் பிராமணக் குடும்பத்திலிருந்து வந்த விதவைப் பெண் வாழ்க்கை பற்றிய தெளிவினைப் பெற்று பெற்றோர் மறுப்பார்கள் என்ற போதிலும் தனது எதிர்கால வாழ்க்கையை இப்படித்தான் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பதை இச்சிறுகதை நிகழ்வு உணர்த்துகின்றது. இப்பெண்ணின் துணிவான முடிவிற்கு அவள் பெற்ற கல்வியும் யாரையும் நம்பி வாழாமல் தனது ஊதியத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தந்த ஆசிரியைத் தொழிலும் காரணமாக இருப்பதை அறிய முடிகின்றது. இளம் விதவைகளாக இருக்கும் பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடந்து சீரழியும் நிலையை மாற்றக்கருதும் கீதாவின் ஆற்றல் தெளிவுபடுத்துகிறது.

மக்கள் தொடர்புச் சாதனங்கள்

பெண்களின் வாழ்வாதாரம் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் அமைகிறது என்பதை 'இருளைத்தேடி' எனும் சிறுகதை காட்டுகிறது. மக்கள் தொடர்புச் சாதனம் நுகர்வு மோகத்தை அதிகரித்து இளம் பெண்களின் மனதைக் கெடுப்பதையும் பத்திரிகை நடத்துபவர்கள் பெண்ணை வியாபாரக் கருவியாக்கிப் பணம் சம்பாதிப்பதையும், அதன் மூலம் அவருடைய வாழ்வாதாரம் அமைகிறது என்பதைக் காட்டுகிறது. இன்றைய நவீன உலகத்தில் விளம்பரப்படங்கள், ஓவியம், சிற்பம் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்களில் மாடலிங்காக தொழில் செய்து வாழ்க்கை வாழும் பெண்களும் காணப்படுகின்றனர்.

இதில் வருவாய் இருப்பதால் தன்மானத்தை கூடப் பெரிதாய் கருதாமல் இத்தொழிலை மேற்கொள்ளும் பெண்ணாக 'ருக்கு' எனும் பாத்திரம் வலம் வருகிறது. வறுமை காரணமாக தன்மானத்தை ஒரு உயர் மதிப்பாகக் கருதாமல், விலைப் பொருளாகப் பாவித்து தொழில் செய்து வாழும் பெண்களுள் மாடலிங் பெண்களும் உள்ளனர். இருப்பினும் பெருமைக்காகவும், புகழுக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், அழகுக் குறித்து மற்றவர் பாராட்ட வேண்டும் என்ற தற்புகழ்ச்சிக்காகவும், மாடலிங் செய்து வாழும் பெண்களும் உள்ளனர்.

முடிவுரை

விளிம்புநிலை பெண்களுக்கு வாழ்வாதாரமே ஆண்களை நம்பி இருப்பதாகும். அந்த ஆண் நம்பிக்கை துரோகம் செய்யும் பொழுது பெண்கள் அவ் ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். அதிலிருந்து மீண்டு பெண்கள் வாழ, கல்வியோ, சொத்துக்களோ, வேலையோ போன் ஆதாயம் தேவைப்படுகிறது. இல்லையெனில் ஏதேனும் ஒரு தொழில் செய்து பிழைக்க வேண்டிய சூழ்நிலை அமைகிறது. குறிப்பாக விபச்சாரம், மக்கள் தொடர்பு சாதனம் மூலம் மானத்தை விற்றும் வாழ வேண்டியுள்ளது.

துணைநூற்பட்டியல்

ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி1) - ஒரு பிடி சோறு - கவிதா, பப்ளிகேஷன் - சென்னை - 017 - ஏழாம் பதிப்பு ஆகஸ்ட் 2019

ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2), ஹீரோவுக்கு ஒரு, ஹீரோயின் - கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - பதிப்பு

ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி2) - இருளைத் தேடி - கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - பதிப்பு


ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி 2), யுக சந்தி, கவிதா பப்ளிகேஷன் - சென்னை - 017 - ஏழாம் பதிப்பு ஆகஸ்ட் 2019

ஆர்.பிரமிளா,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வி.எல்.பி ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர், கோயம்புத்தூர்.

&

முனைவர் கோ.சுரேஷ்,
நெறியாளர் & இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் வி.எல்.பி
ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர், கோயம்புத்தூர்.

இலக்கிய வாழ்க்கை



ஜெயகாந்தன்

தொடக்கம்

1949-ல் ஜெயகாந்தன் 'டிரெடில்' என்னும் முதல் கதையை எழுதினார். ஆனால் முதலில் பிரசுரமானது 'ஆணும் பெண்ணும்' என்னும் சிறுகதை. இக்கதை 1953-ல் சௌபாக்யம் இதழில் வெளியானது. இடதுசாரி அறிஞர்கள் எஸ்.ராமகிருஷ்ணன், ஆர்.கே.கண்ணன் ஆகியோரின் ஊக்குவித்தலால் இடதுசாரி இதழ்களில் தொடர்ச்சியாக எழுதினார். தொ.மு.சி. ரகுநாதன், ஆர்.கே.கண்ணன் ஆகியோர் ஏற்கனவே முற்போக்கு இலக்கியத்தை உருவாக்கியிருந்தாலும் ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, ஜி. நாகராஜன் ஆகியோரே அதன் வளர்ச்சிக்குக் காரணமான எழுத்தாளர்களாகக் கருதப்பட்டனர். தொ.மு.சி.ரகுநாதனின் *சாந்தி*, வ.விஜயபாஸ்கரனின் *சரஸ்வதி*, ப. ஜீவானந்தம் தொடங்கிய *தாமரை*, மற்றும் *சமரன்* ஆகிய இதழ்களில் ஜெயகாந்தன் தொடர்ச்சியாக எழுதினார். பொதுவான இலக்கிய இதழ்களான பிரசண்ட விகடன், கிராம ஊழியன் ஆகிய இதழ்களிலும் ஜெயகாந்தன் அவ்வப்போது எழுதினார். இக்காலகட்டத்தில் அவருடைய அணுக்கமான இலக்கியத்தோழராக கவிஞர் தமிழ்ஒளி இருந்தார். கவிஞர் கே.சி.எஸ்.அருணாசலத்துடனும் நெருக்கம் இருந்தது. ஆனால் அக்காலத்தில் இருந்த மணிக்கொடி இலக்கியக் குழுவினருடன் அவருக்கு அறிமுகமோ நெருக்கமோ இருக்கவில்லை.

சிறுகதைகள்

ஜெயகாந்தனின் சிறுகதைகளை இரண்டு காலகட்டங்களாக பிரிக்கலாம். சாந்தி, சரஸ்வதி இதழ்களில் அவர் எழுதியது தொடக்க காலகட்டம். 1959-ல் கம்யூனிஸ்டு கட்சியுடன் விலக்கம் கொண்டு காங்கிரஸ் ஆதரவாளராக மாறிய ஜெயகாந்தன் கல்கி, ஆனந்த விகடன்

ஆகிய இதழ்களில் எழுத ஆரம்பித்தார். இக்காலகட்டத்தில் கண்ணதாசனுடன் நெருக்கம் உருவாகியது. ஆனந்த விகடனில் வெளிவந்த சிறுகதைகள் வழியாகவே ஜெயகாந்தன் பெரும் வாசகச் செல்வாக்கை அடைந்தார். அவை பொதுச் சமூகத்தின் அறவுணர்வையும் ஒழுக்கவுணர்வையும் சீண்டி மறுபரிசீலனை செய்யவைப்பவையாக இருந்தன. அவருடைய 'யுகசந்தி', 'சுயதரிசனம்', 'குருபீடம்' போன்ற கதைகள் அவரை சிந்தனையை நிலைகுலையச் செய்யும் எழுத்தாளராக பரவலாக அறிமுகம் செய்தன.

1958-ல் ஜெயகாந்தனின் 'ஒருபிடிச் சோறு' சிறுகதை தொகுதி ஸ்டார் பிரசுரம் வெளியீடாக வந்தது. 1960-ல் 'இனிப்பும் கரிப்பும்' என்னும் சிறுகதை தொகுதியும் 1965-ல் 'புதிய வார்ப்புகள்' என்னும் சிறுகதைத் தொகுதியும் வெளிவந்தன.

நாவல்கள்

ஜெயகாந்தனின் முதல் நாவல் 1957-ல் வெளிவந்த *வாழ்க்கை அழைக்கிறது*. 'வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் எனக்கு எந்த நிறைவையும் அளிக்காத நாவல்' என ஜெயகாந்தன் அதைக் குறிப்பிடுகிறார். ஜெயகாந்தனுக்கு பெரும்புகழை ஈட்டித்தந்த கதை 1968-ல் ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த *அக்னிப்பிரவேசம்*. அக்கதைக்கு உருவான எதிர்ப்பின் விளைவாக அவர் அதை மீண்டும் விரிவாக்கி *சில நேரங்களில் சில மனிதர்கள்* என்ற பேரில் 1973-ல் நாவலாக எழுதினார். அந்நாவல் அவருக்கு கேந்திரிய சாகித்ய அக்காதமி விருதைப் பெற்றுத்தந்தது. அதன் தொடர்ச்சியாக *கங்கை எங்கே போகிறாள்* என்ற நாவலையும் எழுதினார். ஜெயகாந்தனின் மிகச்சிறந்த நாவலாக 1973-ல் வெளிவந்த *ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு*

உலகம் கருதப்படுகிறது. ஒரு இலட்சியவாதியான நாடோடியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல் இது.

கட்டுரைகள்

ஜெயகாந்தன் தமிழின் சிறந்த கட்டுரையாசிரியராகவும் அறியப்படுகிறார். 'இவர்கள் உள்ளே இருக்கிறார்கள்', 'சிந்தையில் ஆயிரம்', 'ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்', 'ஓர் இலக்கியவாதியின் சினிமா அனுபவங்கள்' ஆகியவை அவருடைய புகழ்பெற்ற கட்டுரைத் தொகுதிகள்.

திரைப்பட வாழ்க்கை



ஜெயகாந்தன் திரைப்பட இயக்குநராக

ஜெயகாந்தன் இடதுசாரி அமைப்புகள் தொடங்கிய மாற்றுத்திரைப்பட இயக்க அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். எம்.பி.சீனிவாசன், நிமாய் கோஷ், கே.சி.எஸ்.அருணாச்சலம், கெ.விஜயன் ஆகியோர் அவ்வியக்கத்தில் தீவிரமாக இருந்தனர். அவர்கள் *பாதை தெரியுது பார்* என்னும் திரைப்படத்தை தயாரித்தனர். ஜெயகாந்தன் அதில் ஈடுபட்டார்.

1965-ல் ஜெயகாந்தன் தன்னுடைய 'உன்னைப்போல் ஒருவன்' என்னும் நாவலை திரைப்படமாக்கினார். இதில் காந்திமதி, எஸ்.என்.லட்சுமி, பி.உதயன் ஆகியோர் நடித்திருந்தனர். ஆசிய ஜோதி பிலிம்ஸ் தயாரித்த அப்படத்தை ஜெயகாந்தனே இயக்கினார். இத்திரைப்படத்திற்கு 1965-ம் ஆண்டு 12-வது தேசிய திரைப்பட விருதுகளில் இரண்டாமிடம் கிடைத்தது. அதன் திரையரங்கு வெளியிடலை எம்.ஜி.ஆரின் அரசியல் நண்பர்கள் எதிர்த்தனர், பார்வையாளர்கந்த் தாக்கினர், அவர்களிடமிருந்து பார்வையாளர்களை பாதுகாக்க ஜெயகாந்தனே தடியுடன் திரையரங்கு வாசலில் நிற்கநேர்ந்தது என ஜெயகாந்தன் திரையுலக அனுபவங்களைப் பற்றி எழுதிய 'ஒரு எழுத்தாளனின் திரையுலக அனுபவங்கள்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். *யாருக்காக அழுதான்* என்ற படத்தை 1966-ல் ஜெயகாந்தன் இயக்கினார்.

ஜெயகாந்தனின் 'கை விலங்கு' என்னும் கதையை உரிமை வாங்கி 'காவல் தெய்வம் ' என்னும் பேரில் 1969-ல் எஸ்.வி.சுப்பையா படமாக்கினார். சிவாஜி கணேசன் நடிப்பில் கே. விஜயன் இயக்கிய அந்தப்படம் மூலத்தை சிதைத்துவிட்டது என ஜெயகாந்தன் எண்ணினார். தன் படங்களுக்கான உரிமைகளை கொடுப்பதில் அதன்பின் மிகுந்த கடுமையைக் காட்டினார். ஜெயகாந்தனின் கதைகளை வெற்றிகரமாக படமாக்கியவர் ஏ.பீம்சிங். அவருடைய இயக்கத்தில் வெளிவந்த 'சிலநேரங்களில் சில மனிதர்கள்' வணிகவெற்றி பெற்ற கலைப்படம்.



ஜெயகாந்தன் சரஸ்வதி அட்டையில்

ஜெயகாந்தனின் கதைகளை ஒட்டிய திரைப்படங்கள்

- உன்னைப்போல் ஒருவன் (1965), ஜெயகாந்தன்
- யாருக்காக அழுதான் ஜெயகாந்தன் (1966), ஜெயகாந்தன்
- காவல்தெய்வம் (1969), சி.விஜயன்
- சில நேரங்களில் சில மனிதர்கள் (1976), ஏ.பீம்சிங்
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் (1978), ஏ.பீம்சிங்
- கருணை உள்ளம் (1978), ஏ.பீம்சிங்
- எத்தனை கோணம் எத்தனை பார்வை. பி.லெனின்
- புதுசெருப்பு கடிக்கும், அன்பழகன்
- ஊருக்கு நூறு பேர், பி.லெனின்

விவாதங்கள்

ஜெயகாந்தன் எழுத வந்த காலம் முதலே கடுமையான விவாதங்களை உருவாக்குபவராகவே இருந்துள்ளார். இவ்விவாதங்களுக்கான பதில்களை ஜெயகாந்தன் தன் நூல்களின் முன்னுரைகளில் அளித்திருக்கிறார்.

- 1965-ல் வெளிவந்த சுயதரிசனம் என்னும் சிறுகதை பிராமணர்கள் அர்த்தம் தெரியாமல் மந்திரங்களைச் சொல்வதை இழிவு என விமர்சனம் செய்தது. அதையொட்டி ஆனந்தவிகடனில் கண்டனங்கள் வெளியாயின.

- 1965-ல் தினமணி கதிரில் வெளிவந்த 'ரிஷிமூலம்' என்னும் சிறுகதை ஈடிபஸ் காம்ப்ளெக்ஸை பேசுவது. இக்கதை கடும் எதிர்ப்பை உருவாக்கியது. இக்கதையின் பெரும்பகுதியை தினமணி ஆசிரியர் சாவி வெட்டிச்சுருக்கிவிட்டார் என்று சொல்லப்பட்டது. ஜெயகாந்தன் அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதினார். இம்மாதிரி கதைகள் இனிமேல் வெளியிடப்படாது என சாவி அறிவித்தார். வெங்கட் சாமிநாதன் 'போலிமுகங்கள்' என்றபேரில் வணிக இதழ்களை கண்டித்து எழுத அதற்கு 'அழவேண்டாம் வாயைமூடிக் கொண்டிருந்தால் போதும்' என அசோகமித்திரன் கண்டனக் கட்டுரை எழுதினார். பிரமிள் இவ்விவாதத்தில் கலந்துகொண்டு கட்டுரை எழுதினார். வணிக இதழில் இலக்கியப்படைப்புகளை எழுத முடியுமா என்னும் கேள்வி சார்ந்த விவாதமாக இது மாறியது 1975-ல் அவசரநிலைக் காலத்தை ஜெயகாந்தன் ஆதரித்தார். அதை இடதுசாரிகள் கண்டித்தனர்.
- 1968-ல் வெளிவந்த 'அக்கினிப்பிரவேசம்' என்னும் சிறுகதை ஒழுக்கவியலாளர்களால் கண்டிக்கப்பட்டது. அவர்களுக்கு பதிலாக அந்தச் சிறுகதையை விரிவாக்கி சில நேரங்களில் சில மனிதர்கள் என்னும் நாவலாக ஆக்கினார்.
- 1969-ல் திராவிட முன்னேற்றக்கழக தலைவரான சி.என்.அண்ணாத்துரை மறைந்தபோது அஞ்சலிக்கூட்டத்திலேயே "அவரை மூடர்கள் அறிஞர் என்கிறார்கள், பெருமூடர் பேரறிஞர் என்கிறார்கள்" என கண்டித்துப் பேசினார். அது திராவிட இயக்கத்தவர் நடுவே கடுமையான விவாதத்தை உருவாக்கியது.
- 1970-ல் வெளிவந்த 'குருபீடம்' என்னும் சிறுகதை இந்து ஞானிகளை இழிவுசெய்கிறது என்னும் விவாதம் உருவானது.

- 1972-ல் கண்ணதாசன் இதழில் வெளிவந்த 'சினிமாவுக்குப் போன சித்தாளு' என்னும் சிறுகதை எம்.ஜி.ஆரைக் கடுமையாக விமர்சனம் செய்தது. அதை எம்.ஜி.ஆர் ஆதரவாளர்கள் கண்டித்தனர். ஜெயகாந்தன் மிரட்டப்பட்டார்.
- 1990-ல் இ.பி.ஆர்.எல்.ஃப் இயக்கத்தின் தலைவரான பத்மநாபா கொலையை ஒட்டி விடுதலைப்புலிகளை மிகக்கடுமையாக தாக்கிப்பேசினார். அதை தமிழியக்கத்தவர் கண்டித்தனர். கடைசிவரை விடுதலைப் புலிகள் இயக்கத்தை கண்டித்தவராகவே இருந்தார்.
- 1977-ல் வெளிவந்த 'ஜெயஜெய சங்கர' நாவலும் அதன் தொடர்ச்சியான 'ஹரஹர சங்கர' நாவலும் (2005) காஞ்சி சங்கராச்சாரியாரை புகழ்பவை என்றும், ஜெயகாந்தன் பிராமண சாதியவாதத்தை ஆதரிக்கிறார் என்றும் விமர்சனங்கள் உருவாயின.
- 2000-ல் அமெரிக்கா சென்று வந்தபின் அமெரிக்காவில் முதலாளித்துவம் ஒருவகையான நலம்நாடும் அரசை அமைத்துள்ளது, அது ஏறத்தாழ சோஷலிசம் போன்றது என்னும் கருத்தை முன்வைத்தார். அதைச்சார்ந்த விவாதங்கள் நடைபெற்றன. இடதுசாரிகளால் கண்டிக்கப்பட்டார்
- ஏப்ரல் 23, 2005-ல் சென்னை சம்ஸ்கிருத சேவா சமிதி நிகழ்வில் சம்ஸ்கிருதத்தை போற்றியும் தமிழைப் பழித்தும் பேசினார் என்று தமிழியக்கத்தவர் குற்றம் சாட்டினர். மொழிப்பற்று என்பது நாய் தன்னைத்தானே நக்கிக்கொள்வது போன்றது என்றும் எல்லா மொழிகளின் அழகையும் அறியும் உள்ளம் வேண்டும் என்றும் ஜெயகாந்தன் பேசியிருந்தார். பின்னர் நாய் என்னும் சொல் தமிழறிஞர்களைப் புண்படுத்தியிருந்தால் மன்னிப்பு கோருவதாக அறிவித்தார்.
- 2014-ல் ஜெயகாந்தன் நோயுற்றபோது அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி நிதியுதவியும் பிற உதவிகளும் அளித்தார். நன்றி தெரிவிக்கும் முகமாக

ஜெயகாந்தன் மு.கருணாநிதியைச் சந்தித்தார். அரசியலில் அவர் மிகக்கடுமையாக எதிர்த்த மு.கருணாநிதியை அவர் சந்தித்தது விவாதப்பொருளாக ஆகியது.

இலக்கிய விமர்சன மதிப்பீடு

ஜெயகாந்தனை தமிழிலக்கியத்தின் முதன்மையான படைப்பாளி என்றும், புதுமைப்பித்தனுக்குப் பின் தமிழில் எழுதிய மிகச்சிறந்த சிறுகதையாசிரியர் என்றும் கல்வியாளர்கள் மதிப்பிடுகிறார்கள். முற்போக்கு விமர்சகர்களான க. கைலாசபதி, கார்த்திகேசு சிவத்தம்பி, நா. வானமாமலை ஆகியோரும் ஜெயகாந்தன் தமிழிலக்கியத்தில் முதன்மையான செல்வாக்கு செலுத்திய படைப்பாளி என்று மதிப்பிடுகிறார்கள். முற்போக்கு இலக்கியத்தை விமர்சித்த ஈழப்படைப்பாளிகளான மு. தளையசிங்கம், எஸ். பொன்னுத்துரை ஆகியோரும் ஜெயகாந்தனின் இலக்கிய முதன்மையை வலியுறுத்துகின்றனர்.

சிற்றிதழ்கள் சார்ந்து செயல்பட்ட நவீனத் தமிழிலக்கியச் சூழலில் க.நா.சுப்ரமணியம் ஜெயகாந்தனின் படைப்புகள் கருத்துப்பிரச்சார நோக்கம் கொண்டவை, உரத்த குரலில் நேரடியாகப் பேசுவதனால் அழகியல் நேர்த்தி அற்றவை, சிந்தனைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட செயற்கையான கதாபாத்திரங்கள் கொண்டவை என வரையறை செய்து நிராகரித்தார். அக்கருத்தையே அழகியல் விமர்சகர்களான வெங்கட் சாமிநாதன், சுந்தர ராமசாமி ஆகியோரும் முன்வைத்தனர். "ஊஞ்சலில் அமர்ந்து வாசனைப் பாக்குத் தூள் போட்டுக்கொண்டிருந்த சிறுகதையைத் தெருவில் இறக்கினார் புதுமைப்பித்தன். ஜெயகாந்தன் அதை வாழ்வின் அடிமட்டம் வரை விரட்டினார். ஜெயகாந்தனின் கதைகள் முன் முடிவுகள் கொண்டவை. எனினும் அனுபவச் செழுமையும் வர்ணங்களும் கற்பனை ஆற்றலும் மனித இயல்புகளை ஒரு எல்லை வரையிலும் அனுசரித்துச் செல்வதும் கதைகளாக இவரது எழுத்துகள் வெற்றி பெறக் காரணங்களாக

அமைகின்றன. கதை மரபைச் சார்ந்த இவரிடம் தொனி, சிக்கனம், சிறுகதைக்குரிய தனித்தன்மைகள் எவையும் இல்லை. எழுத்துப் பாங்கின் கூறுகளைவிட, மேடையில் குரலெடுத்துத் தம் கதைகளைக் கூறும் தன்மையையே இவரது கதைகள் கொண்டிருக்கின்றன" என்கிறார் சுந்தர ராமசாமி.

கல்வியாளரும் அழகியல் விமர்சன மரபைச் சேர்ந்தவருமான எம்.வேதசகாயகுமார் அவருடைய 'புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் ஓர் ஒப்பீடு' என்னும் நூலில் ஜெயகாந்தன் புதுமைப்பித்தனின் கதைகளில் உள்ள அழகியல் ஒருமையை அடையாத பிரச்சார எழுத்தாளர், பரப்பியல் எழுத்தாளர் என நிராகரிக்கிறார்.

அழகியல் மரபைச் சேர்ந்த விமர்சகரான ஜெயமோகன் ஜெயகாந்தன் முற்போக்கு இலக்கிய மரபின் முதன்மை முகம் என்றும், முற்போக்கு எழுத்துக்கான அழகியலை அவர் முன்வைத்தார். அது நவீனத்துவ அழகியலில் இருந்து வேறுபட்டது என்றும், அவருடைய படைப்புக்கள் அவர் வாழ்ந்த காலத்தின் கருத்தியல் நெருக்கடிகளை வேறெந்த எழுத்தாளரை விடவும் ஆழமாக முன்வைத்தன என்றும் கூறுகிறார் [இலக்கிய முன்னோடிகள் வரிசை நூல்கள்]. "ஜெயகாந்தனை மதிப்பிடுகையில் முக்கியமாக கவனத்துக்கு வரவேண்டிய விஷயம் அவரது, உண்மையான சத்திய வேட்கையே. தான் வாழ்ந்த காலகட்டத்தின் பிரச்சினைகளை உள்ளே சென்று ஆராய தனக்குத்தானே வகுத்துக்கொள்ள பிறருக்கு விளக்க அவர் கொண்ட முயற்சிகள் எந்தவிதமான பாவனைகளும் சமரசங்களும் இல்லாத நேர்மையான யத்தனங்கள்" என்று குறிப்பிடுகிறார்.











ஜெயகாந்தனின் திரைப்படங்கள்

9

சிங்கப்பூரில் இருந்து வந்திருந்த நண்பர் மூர்த்தியுடன் நேற்று எழுத்தாளர் ஜெயகாந்தனைக் காண்பதற்காக கே.கே.நகரில் உள்ள

அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். நண்பர்களைச் சந்திப்பதற்காக வீட்டின் மாடியில் தனியாக ஒரு அறை வைத்திருக்கிறார். கூரை வேய்ந்தது. முன்னதாக சில முறை அங்கே சென்றிருக்கிறேன். உரத்த சிந்தனைகளுடன் உற்சாகமாக பேசக்கூடியவர். இடையில் அவர் புகைப்பதும் குடிப்பதும் இயல்பாக நடந்து கொண்டிருக்கும்.

அவரைத் தினசரி சந்திக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். அது ஒரு வித்வசபை. அதை வழிநடத்துகிறவர் ஜெயகாந்தன். அரசியல் சமூகம் இலக்கியம் சினிமா என்று பல்வேறு பொருள் சார்ந்து உரையாடுவதும் விவாதிப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது

கிரேக்கத்தில் சாக்ரடீஸ், அரிஸ்டாடில் போன்றவர்கள் இப்படி தனக்கு விருப்பமான நண்பர்களுடன் கூடி அமர்ந்து சமூக விஷயங்கள் குறித்துபேசி விவாதம் செய்து தர்க்க நியாயங்களை எடுத்துச் சொல்வார்கள் என்று வாசித்திருக்கிறேன். அதை பல வருடமாக நடைமுறை படுத்திக் கொண்டிருப்பவர் ஜேகே.

தனது மீசையை தடவிவிட்டபடியே கம்பீரமான பார்வையும் புன்னைகயுமாக ஜேகே பேசுவதை கேட்பது அலாதியான அனுபவம். இந்த முறை நாங்கள் சென்ற நேரம் பின்மதியம் என்பதால் அவர் மட்டும் தனித்திருந்தார். அப்படி ஜேகேயைக் காண்பது அபூர்வம். சமீபமாக உடல்நலமற்று மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வந்த காரணத்தால் அவர் சற்று தன் சபையின் வேகத்தை குறைத்திருக்கிறார் என்று தோன்றியது.

அவரது அறை மிக எளிமையானது. பிளாஸ்டிக் நாற்காலிகள். நீண்ட மேஜையொன்று. அவர் அமர்வதற்கான சுழல்நாற்காலி. ஓரமாக கண்ணில் படும் காலிடம்ளர்கள், சாம்பல்கிண்ணம், நாலைந்து புத்தகங்கள். எட்டிப்பார்க்கும் தென்னைமரம். ஜேகேயின் இளமைதோற்றம் கொண்ட சித்திரம், அவர் விருது வாங்கும் புகைப்படம், மாறாத புன்னகையுடன் எதிரில் அமர்ந்திருக்கும் ஜேகே. தோற்றத்தில் சோர்வும் அசதியும் படிந்திருந்த போதும் பேச்சில் கம்பீரம் அப்படியே இருந்தது.

அன்றைய பேச்சு அவரது இயக்கிய திரைப்படங்கள், அவர் கதைகள் படமாக்கபட்டது பற்றியதாக இருந்தது. ஜேகே தயாரித்து இயக்கிய உன்னைப்போல் ஒருவன் திரைப்படத்திற்கு திரைக்கதை வசனம் தனி புத்தகமாக வெளியாகியிருக்கிறதா என்று நண்பர் மூர்த்தி கேட்ட போது திரைக்கதை என்பது இயக்குனருக்கான ஒரு கைடுலைன். ஒரு மேப் அவ்வளவு தானே என்று இயல்பாக சொன்னார் ஜேகே.

இருபது வருடங்களுக்கு முன்பாக சிலநேரங்களில் சில மனிதர்கள் திரைக்கதை புகைப்படங்களும் மிக அழகாக வெளியிட்டப்பட்டது. தமிழில் அது தான் முதல் திரைக்கதை புத்தகம் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன்.

ஜேகே அதை ஆமோதித்து அது மிகச் சிறப்பாக வடிவமைக்கபட்டிருந்தது. தற்போது வெளியாகி உள்ள பதிப்பில் காட்சிகளுக்கு ஏற்ற புகைப்படங்கள் இல்லை என்றார். அந்த பதிப்பு எங்கே கிடைக்கும் என்று உடனே மூர்த்தி கேட்கத் துவங்கி நண்பர்களுக்கு போன் செய்ய ஆரம்பித்தார். என்னிடம் ஒரு

பிரதியிருந்தது. ஆனால் அது எங்கேயிருக்கிறது என்று தேடுவது கடினம் என்றேன். அது போல ஏன் உன்னைப்போல ஒருவனுக்கு திரைக்கதை புத்தகம் வெளியிடக்கூடாது என்று தன் ஆசையை வெளிப்படுத்தினார் மூர்த்தி.

மூர்த்தி இலங்கையை சேர்ந்தவர். ரஷ்யாவில் படித்தவர். ரஷ்யாவிற்கு ஜெயகாந்தன் வந்த நாட்களில் நண்பராகி இன்று வரை அவர் மீது மிகுந்த அபிமானமும் நேசமும் கொண்டவர். ஜேகேயை பற்றிய அத்தனை தகவல்கள் புத்தகங்கள் வீடியோ என்று தேடித்தேடி சேகரித்து வைத்துக் கொண்டிருப்பவர்.

உன்னைப்போல் ஒருவன் திரைப்படம் தேசிய விருது பெற்ற படம். 1965ம் ஆண்டு வெளியானது. அந்த ஆண்டு சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டது சத்யஜித்ரேயின் சாருலதா. ரேயோடு ஜேகேயின் படமும் போட்டியிட்டது என்பது பெருமைக்குரியதாக இருக்கிறது.

ஒரு எழுத்தாளர் தனது விருப்பத்தின்படியே ஒரு திரைப்படத்தை உருவாக்கி அதற்கு தேசிய விருது கிடைத்தது மிகப்பெரிய சாதனை. அந்தப்படத்தின் பிரிண்ட் எங்கேயிருக்கிறது. அதன் டிவிடி கூட இப்போது கிடைப்பதில்லை என்று கேட்டதும் அதன் பிரிண்ட் தன்னிடம் இல்லை. யூமாடிக் ஒன்று உள்ளது. அதிலிருந்து பிரதி எடுத்து வைத்திருக்கிறேன் என்று சொன்னார்.

அப்படம் சோவியத் யூனியனில் திரையிடப்பட்டது இல்லையா. அப்படியானால் அவர்கள் தங்கள் சேமிப்பில் படத்தின் பிரதியை வைத்திருப்பார்கள் தானே என்று கேட்டதற்கு உண்மை ஆனால் அந்த

சோவியத் யூனியனே இப்போது இல்லையே. அதை எப்படி தேடுவது என்று ஆதங்கப்பட்டார்.

தேசிய விருதுபெற்ற படங்களின் பிரதிகளை மத்திய அரசு விலைக்கு வாங்கி பாதுகாத்து வைத்திருப்பது வழக்கம் அப்படி பூனாவில் உள்ள தேசிய திரைப்பட காப்பகத்தில் உங்களது படத்தின் பிரதியொன்று இருக்ககூடும் அல்லவா என்று சொன்னேன். தெரியவில்லை. இருக்கிறதா என்று யாராவது விசாரித்து பார்க்க வேண்டும் என்றார்

அதே ஆண்டுவெளியான சத்யஜித்ரேயின் சாருலதா இன்று டிஜிட்டில் முறையில் புத்துருவாக்கம் செய்யப்பட்டு உலகம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தோடு தேசிய விருது பெற்ற ஜெயகாந்தனின் திரைப்படத்தின் பிரதி என்ன ஆனது என்று கூட அறிந்து கொள்ள முடியவில்லை என்பது வேதனைக்கு உரிய விஷயம்.

சத்யஜித்ரேயின் சில படங்களுக்கும் இது போன்று மூலப்பிரதிகள் அழிந்தும் தீக்கு இரையாகியும் போயின. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு ஹேவ்லாக் பெகட் என்ற நிறுவனம் ரேயின் படங்களை பாதுகாத்து ஆவணப்படுத்துவதற்காக பலகோடி நிதியுதவி செய்திருக்கிறது. அதன்படி அவரது படத்தின் பிரதிகளை தேடி எடுத்து அமெரிக்காவில் உள்ள நவீன டிஜிட்டில் டிரான்ஸ்பர் முறையில் புத்துருவாக்கம் செய்திருக்கிறார்கள்.

ஜேகே ஞானபீடம் பரிசு பெற்ற படைப்பாளி. நாடறிந்த சிந்தனையாளர். சினிமாவில் தனக்கென தனிஅடையாளம் பதித்தவர். இவ்வளவு சிறப்பு கொண்டவராக இருந்தும் அவர்

இயக்கிய படங்களை இன்று வீடியோவாக காண்பதற்கு கூட வழியில்லாமல் தானிருக்கிறது.

ஜேகேயின் உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான், சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், எத்தனை கோணம் எத்தனை பார்வை, புதுசெருப்பு கடிக்கும் போன்ற படங்களை சேகரம் செய்து டிஜிட்டில் டிரான்ஸ்பர் செய்தால் அதைத் தனியான ஒரு திரைவிழாவாக நடத்தலாம். ஆனால் இந்தப் படங்களின் மூலப்பிரதிகள் எங்கே யாரிடம் இருக்கின்றன. எப்படி கண்டுபிடிப்பது என்பது பெரிய கேள்வி.

இயக்குனர் லெனின் ஜெயகாந்தனின் ஊருக்கு நூறு பேர் கதையை படமாக்கி அது தேசிய திரைப்படவிழாவில் பங்குபெற்றது. அதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அதன் டிவிடி கிடைப்பதில்லை. சினிமாவுக்கு போன சித்தாளு கௌதமன் இயக்கத்தில் வெளியாகி இருக்கிறது என்றார்கள். அதை நான் இதுவரை கண்டதில்லை.

தற்போது இளையராஜாவின் தயாரிப்பில் ரவிசுப்ரமணியம் இயக்கி ஜெயகாந்தனை பற்றிய மிக நேர்த்தியான ஆவணப்படம் வெளியாகி இருக்கிறது. இது போலவே முன்பு சா.கந்தசாமி ஜேகே பற்றி ஒரு ஆவணப்படத்தை தயாரித்து இருக்கிறார். சிங்கப்பூர் தொலைக்காட்சி ஒரு ஆவணப்படத்தை தயாரித்து இருக்கிறது. இவை முழுமையாக எவரது சேமிப்பிலும் இல்லை.

சிலநேரங்களில் சில மனிதர்கள் டிவிடியாகக் கிடைக்கின்றது. சிவாஜி, எஸ்விசுப்பையா நடித்து வெளியான காவல்தெய்வம் ஜெயகாந்தனின் கதை. அது டிவிடியாக கிடைக்கிறது. மற்றபடங்கள் இன்று பார்வைக்கு கிடைப்பதில்லை. முன்பு ஒருமுறை ராஜ்டிவி யாருக்காக அழுதான் படத்தினை ஒளிபரப்பு செய்தது. அதன்பிறகு அதுவும் காண கிடைப்பதில்லை.

ஜெயகாந்தன் பாடல் எழுதிய பாதை தெரியுது பார் திரைப்படத்தின் பிரதியும் இன்றில்லை. சிட்டுக்குருவி பாடுது தன் பெட்டைத் துணையை தேடுது என்ற அருமையான பாடல் அப்படத்தில் உள்ளது.

ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் படத்தின் நெகடிவ் வலம்புரி சோமநாதனிடம் உள்ளது என்று ஜேகே சொன்னார். அதை அவர் வைத்துக் கொண்டு என்ன செய்வார்.ஏதாவது ஒரு நிறுவனமோ ஆர்வலரோ அவரிடமிருந்து வாங்கி டிவிடியாக வெளியிட்டால் பயனுள்ளதாக அமையும்

அது போலவே ஜெயகாந்தனின் திரைப்படங்களின் பிரதியோ, நகல்பிரதியோ யாரிடமாவது இருந்தாலோ, அல்லது அது பற்றிய தகவல்கள் தெரிந்தாலே அதை தெரியப்படுத்தவும்.

திரைப்பட காப்பகம் என்று தமிழில் எதுவுமில்லை. இவ்வளவு கோடிக்கணக்கில் முதலீடு செய்து திரைப்படங்களை உருவாக்கும் தமிழகத்தில் படங்களின் பிரிண்டுகளை பாதுகாக்க முறையான ஏற்பாடுகள் இல்லை. விருதுபெற்ற படங்களை பார்வையிடுவதற்கு வழிகள் இல்லை. லேப்பில் வைத்து பாதுகாக்கபட்ட படங்களே

முறையான பராமரிப்பு இன்றி சிதைந்து போய்விட்ட அவலத்தை இயக்குனர் பாலுமகேந்திரா அவர்கள் ஒருமுறை வருத்தம் தோயத் தெரிவித்தார்.

பூனாவில் உள்ள தேசிய திரைப்பட காப்பகம் போல ஒன்று தமிழகத்திற்கு கட்டாயம் தேவை. அதைச் சாத்தியமாக்குவது அரசின் கையிலும், திரைப்பட உலகின் கையிலும் தானிருக்கிறது.

ஜெயகாந்தனின் திரைப்படங்கள் மிக முக்கியமானவை. அவை வெறும்கேளிக்கை படங்கள் அல்ல. அவர் இயக்கிய படங்களில் காணப்படும் யதார்த்தமும் அடித்தட்டு மக்களின் வாழ்வும் சமூக கோபமும் மிக முக்கியமானவை. சில நேரங்களில் சில மனிதர்கள் நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்ற படங்களில் விவாதிக்கபடும் பெண் சுதந்திரம் மற்றும் ஆண்பெண் உறவு குறித்த விவாதங்கள் தீவிரமானவை. இந்த படங்களில் நடித்து லட்சுமி தேசிய விருது பெற்றிருக்கிறார்.

இருபது வருடங்களுக்கு மேலாக இருக்கும். மதுரை அமெரிக்கன் கல்லூரி ஜெயகாந்தனுக்கு ஒரு வார காலம் விழா நடத்தியது. அதில் ஜெயகாந்தன் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் யாவும் விவாதித்திற்கு உட்படுத்தபட்டன. நேருக்கு நேர் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்வில் ஜெயகாந்தனின் திரைப்படங்களும் திரையிடப்பட்டன. ஒரு எழுத்தாளருக்கு கல்லூரி ஒன்று ஒருவார கால நிகழ்ச்சி நடத்தியது அதுவே முதல்முறை. மிக சிறப்பாக அமைந்திருந்தது.

இன்று அது போல ஜெயகாந்தனின் திரைப்படங்கள் ஒரே சேரத் திரையிடப்பட்டு அது குறித்து விமர்சனங்கள் விவாதங்கள் நடைபெற வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கு யாவரும் ஒன்றிணைந்து முன்முயற்சி கொள்ள வேண்டும். அதற்கு முதல்தேவை அவரது படத்தின் பிரதிகள். அதை தேடுவதும் சேமிப்பதும் நம் முயற்சியில் தானிருக்கிறது.

கதையாசிரியர்: ஜெயகாந்தன்

57 கதைகள் கிடைத்துள்ளன.

https://www.sirukathaigal.com/tag/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D/

Videos

01] **கலைஞனின் உடல்மொழி:ஜெயகாந்தன்_03**
https://www.youtube.com/watch?v=veSswFDlbTY [14:12]
02] **நாம் எல்லோருமே பாரதியின் வாரிசுகள் தான்! - ஜெயகாந்தன்**
https://www.youtube.com/watch?v=4uN6WOT_Uuw[23:40]

ஜெயகாந்தன் விழா.

அனுபவம்

https://www.sramakrishnan.com/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BE/

இன்று சென்னைச் சங்கமத்தின் ஒருபகுதியாக நடைபெற்ற தமிழ் சங்கம விழாவில் ஜெயகாந்தன் சிறுகதைகள் பற்றிப் பேசினேன். நிகழ்விற்கு ஜெயகாந்தன் வந்திருந்தார். மேடையில் அவரது அருகாமையில் அமர்ந்திருந்தது மிக சந்தோஷமாக இருந்தது.

ஜெயகாந்தன் இன்று ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆனால் அந்த மௌனமான அவதானிப்பு மற்றும் பேச்சை கூர்ந்து கேட்ட விதம் மிகவும் பிடித்திருந்தது. காலை அமர்வு என்பதால் அதிக கூட்டமில்லை.நூறு பேருக்கும் குறைவாகவே இருக்ககூடும். ஜெயகாந்தன் சிறுகதைகள் பற்றி பேசுவதற்காக நான் அவரது இரண்டு கதைகளை தேர்வு செய்து கொண்டிருந்தேன்.

இரண்டு குழந்தைகள் என்ற அவரது கதை. பஞ்சம் பிழைப்பதற்காக ராமநாதபுரத்திலிருந்து தஞ்சை பூமிக்கு வந்த ஒரு பெண் மற்றும் அவளது குழந்தையின் கதை. சிவப்பி என்ற பெண் பஞ்சகாலத்தில் தஞ்சை பகுதி கிராமத்திற்கு வந்து கடுமையாக உழைக்கிறாள். அவளுக்கு நாலைந்து வயதில் ஒரு பையன். அந்த பையனை எப்போதும் இடுப்பில் தூக்கி வைத்து கொண்டே அலைகிறாள்.

தினசரி ஒரு ஐயர் வீட்டு மதிய நேரம் வடித்த கஞ்சி வாங்கி குடிப்பது அவளது வழக்கம். அந்த வீட்டின் ஐயருக்கு அவளை பிடிப்பதேயில்லை. அவளுக்கு ஊற்றப்படும் கஞ்சியில் ஒரு பருக்கை தவறிவிழுந்தவிட்டால் கூட அவர் கத்துகிறார். வெறும்கஞ்சியை மட்டுமே குடித்து அவள் எவ்வளவு திடகாத்திரமாக இருக்கிறாள் பாரு என்று சொல்லி காட்டுகிறார். அத்துடன் இனிமேல் சாதத்தை வடிக்காதே பொங்கிவிடு என்று ஆலோசனை வேறு சொல்கிறார்.

சிவப்பி கடுமையான உழைப்பாளி. ஒரு நாள் ஐயர் வீட்டில் விருந்து நடக்கிறது. பசியில் கஞ்சிக்காக காத்திருக்கிறாள் சிவப்பி. விருந்தில் அவளை கவனிக்கவேயில்லை. பிறகு மாமி அவளை அழைத்து கிணற்றில் தண்ணீர் இறைத்து ஊற்ற சொல்கிறாள். அவள் மாங்குமாங்கென வேலை செய்கிறாள். அவளது மகன் வெளியே உட்கார்ந்து பசியோடு வீட்டையே பார்த்து கொண்டிருக்கிறான். விருந்து சாப்பிட்டு முடித்த ஐயரின் பேத்தி வெளியே வந்து காரணமில்லாமல் அழுது கொண்டிருக்கிறாள்.

அந்த சிறுமிக்கு இந்த வேலைக்காரியின் மகனை விளையாட்டு பொம்மை போல காட்டி கேலி செய்கிறார் ஐயர். அவளுக்கு அழுகை அடங்கவில்லை. அந்த பிள்ளையை பார்த்து வேலைக்காரி மகன் சிரிக்கவே அவருக்கு ஆத்திரம் வருகிறது. அந்த சிறுவனை அவமானப்படுத்த துடிக்கிறார். முடிவில் அவனை எச்சில் இலையில் தூக்கி எறியப்பட்ட ஐôங்கிரியை எடுத்து சாப்பிட வைக்கிறார்.

அதை கண்ட சிவப்பி மகன் கையிலிருந்த ஜாங்கிரியை பிடுங்கி எறிந்து நான் உழைச்சி சாப்பாடு போடுறனே எதுக்குடா பிச்சை எடுக்குறே என்று அடிக்கிறாள். இதற்கு காரணம் அந்த ஐயர் என்று தெரிந்து அவரை முறைத்தபடியே வெளியேறி போகிறாள். அதன்பிறகு அவள் அந்த வீட்டுபக்கமே வரவில்லை என்று கதை முடிகிறது

இந்த கதை பஞ்சம் பிழைக்க போனவர்களை பற்றிய நினைவுகளை தூண்டிவிட்டது. எனது பால்யத்தில் தஞ்சை பஞ்சம் பிழைக்க போன பலரை தெரியும். அவர்கள் மறுபடியும் ஊர் திரும்பவப்யில்லை.

இன்னொரு பக்கம் பிழைக்கப்போன இடத்தில் பட்ட அவமானங்களை மறைத்து கொண்டு வாழ முயன்று தோற்றுபோய். அவர்கள் கடைசிபுகலிடமாக சென்னை வந்து சேர்ந்து இன்றும் நடைபாதை வாசிகளாகவே வாழ்கிறார்கள்.

இக்கதையில் வரும் சிவப்பி பஞ்சத்திலும் உழைத்து வாழ நினைக்கிறாள். வாழ்க்கையை பயமற்று எதிர்கொள்கிறாள். அவளது மகன் ஒரு அற்புதமான கதாபாத்திரம். ஜெயகாந்தன் கதைகளில் வரும் குழந்தைகள் அற்புதமானவர்கள். குழந்தைகளின் மீதான ஏக்கம் பிரிவு அவர் கதைகளில் திரும்ப திரும்ப வருகிறது. இக்கதையில் வரும் சிவப்பியின் மகன் இன்னமும் சரியாக பேச்சு வராதவன். அவன் கையில் ஒரு முறுக்கை வைத்து கொண்டு தாயின் இடுப்பில் தொங்கியபடியே வரும் காட்சி தத்ருபமாக கண்ணில் தெரிகிறது.

இந்த கதையை வாசித்த உடனே நினைவிற்கு வந்த கதை கு. அழகிரிசாமியின் திரிபுரம். அதுவும் பஞ்சம் பிழைக்க போன இடத்தில் தாயும் மகளும் அடையும் அவமானம் பற்றியதே. அது போலவே இந்த கதை புதுமைபித்தனின் கதையில் வரும் குழந்தைகளை அதிகம் நினைவூட்டுகிறது.

குரலை உரத்தாமல் சீராக கதை சொல்லும் முறை. குழந்தையை கூட பேதம் பார்க்க சொல்லும் பெரிய மனிதனின் அற்பமனது, அவரது மனைவியின் கதாபாத்திரம் என்று கதை மனதில் தொடர்ந்து அலைகளை உருவாக்கியபடியே இருந்தது. இந்த கதை மூன்று தளங்கள் கொண்டது. பஞ்சபிழைக்க போன பெண் அவளை பிரிந்த கணவன் அவர்களது போராட்டமிக்க தினசரி வாழ்க்கை.

இரண்டாவது. ஐயர் மற்றும் வசதியில்லாத வீட்டில் பிறந்து வந்தவள் என்று குற்றம் சொல்லிக்காட்டப்படும் அவரது மனைவி. மூன்றாவது சம வயதுள்ள இரண்டு குழந்தைகள். இந்த தளங்கள் ஒன்றையொன்று வெட்டி ஊடுருவுகின்றன.

இன்னொரு கதை நான் ஜன்னலருகே உட்கார்ந்திருக்கிறேன். திருமணம் ஆகாத பெண் ஒருத்தி வீட்டு ஜன்னல் வழியே உலகை காண்பதை பற்றியது. இக்கதையில் வரும் ஜன்னல் நூற்றாண்டுகளாக பெண்கள் மீதான கலாச்சார ஒடுக்குமுறையின் அடையாளம் போலவே வருகிறது. அந்த பெண் நேரடியாக பேசுவது போன்ற கதை சொல்லும் முறை.

கதையின் வழியே அவர் காட்டும் வெளிஉலகின்காட்சிகள். அதிலிருந்து உருவாகும் அவளது ஆசைகள், நிராசைகள். அந்த பெண் கதையின் முடிவில் ஏன் பாட்டி ஜன்னல்கிட்டயே உட்கார்ந்திருக்கே என்று குரல் கேட்டு திடுக்கிடும் போது வாசகனாக நாமும் திடுக்கிடவே செய்கிறோம். வயதை மறந்து உட்கார்ந்திருந்த அந்த பெண் முகம் ஒரு நிமிசம் மனதில் தோன்றி மறைகிறது. கல்லாக உறைந்து போன அகலிகை போல அது நினைவூட்டுகிறது.

மாக்சிம் கார்க்கி கதைகளில் வரும் சிறுவர்கள் அசலானவர்கள். அவரை போன்ற சதையும் ரத்தமும் கொண்ட குழந்தைகளை புதுமைபித்தனிலும் ஜெயகாந்தனிலும் காணமுடிகிறது.

ஜெயகாந்தன் கதைகள் வழியாக தமிழ் கதைமரபு எப்படி மறுஉருவாக்கம் பெற்றது மற்றும் தமிழ் எழுத்தாளர்களின் சமூக அக்கறைகள் பற்றி பேசினேன். அதன் ஒளிவடிவம் வெளியாகும் என்கிறார்கள்.

ஒரு எழுத்தாளனின் வெவ்வேறு சிறுகதைகள் வேறுவேறுசந்தர்பங்களில் மனதிற்கு நெருக்கமாக இருக்கின்றன என்பதே வாசிப்பில் நான் கண்ட உண்மை , இந்த முறை ஜேகேயை வாசித்த போது மற்றகதைகளை விட இந்த இரண்டும் என் மனதிற்கு மிக நெருக்கமாக மறுபடி மறுபடி வாசிக்கும்படியாக இருந்தன.

ஜெயகாந்தனின் தேர்வு செய்யப்பட்ட சிறுகதைகள் மூன்று தொகுதியாக இணையத்தில் இலவசமாக கிடைக்கின்றன. தரவிறக்கம் செய்து கொள்ள விரும்புகின்றவர்கள் இந்த இணைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஜெயகாந்தன் சிறுகதைகள்:

நான் இருக்கிறேன்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%87%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%87%E0%AE%A9%E0%AF%8D

அந்த சத்திரத்தின் வாசற்கதவுகள் சாத்தி, பூட்டப்பட்டிருக்கும்; பூட்டின்மீது ஒரு தலைமுறைக் காலத்துத் துரு ஏறி இருக்கிறது. கதவின் இடைவெளி வழியாகப் பார்த்தால் உள் சுவர்களைக் கிழித்துக்கொண்டு கம்பீரமாய் வளர்ந்துள்ள அரசஞ்செடிகளும் காடாய் மண்டிக்கிடக்கும் எருக்கம் புதர்களும் தெரியும். சத்திரத்துக்கு எதிரே

அதாவது சாலையின் மறுபுறத்தில் நான்கு புறமும் படித்துறையுள்ள ஆழமில்லாத குளம்; குளத்திற்கு அப்பாலும், குளத்தைச் சுற்றிலும் செழிப்பான நஞ்சை நிலப்பகுதி, வரப்பினூடே நடந்து ஏறினால், சற்றுத் தூரத்தில் ரயில்வே லைன் மேட்டுப் பகுதி. ரயில்வே லைனுக்கு மறுபுறம் - 'இந்தப் பக்கம் செழித்துத் தலையாட்டிக் கொண்டிருக்கும் பயிர்களை வளர்த்ததன் பெருமை என்னுடையதுதான்' என்று அலையடித்துச் சிலு சிலுக்கும் ஏரி நீர்ப்பரப்பு கண்ணுக்கெட்டிய தூரம் பரந்து கிடக்கிறது.

அதற்கப்புறம் ஒன்றுமில்லை; வெறும் தண்ணீர்தான்; தண்ணீர் பரப்பின் கடைக்கோடியில் வானம்தான் தண்ணீரும் வானமும் தொட்டுக்கொண்டிருக்கின்ற இடத்தில் நிலவின் பெருவட்டம் மங்கிய ஒளியை ஏரிநீரில் கரைத்து மிதந்து கொண்டிருக்கிறது...நிலவு மேலே ஏற ஏற அதன் உருவம் குறுகிச் சிறுத்தது; ஒளி பெருகிப் பிரகாசித்தது. ஒரு கோடியில் எழுந்து, ரயில்வே லைன் மேட்டின் மேலேறிய நிலவு வீசிய வெளிச்சம், மறுகோடியில், சத்திரத்துத் திண்ணையில் உட்கார்ந்து உணவருந்திக்கொண்டிருந்த அந்த வியாதிக்காரப் பிச்சைக்காரனின் புத்தம் புதிய தகரக் குவளையின் மீது பட்டுப் பளபளக்க, அதன் பிரதிபிம்பம் அவன் முகத்தில் விழுந்தது.

திண்ணையில் அவனைத் தவிர யாரும் இல்லை. அவன் அந்தத் தனிமையிலும், தகரக் குவளையில் ஊறிக் கிடந்த ரசத்து வண்டல் சோற்றிலும் லயித்துத் தன்னை மறந்த மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டே ஒவ்வொரு கவளமாய்ச் சாப்பிட்டான். அவன் பார்வை நிமிர்ந்து நிலவில் பதிந்திருந்தது. வாய் நிறையச் சோறுடன் அவன் பாடுவது தெளிவாய் ஒலிக்கவில்லை. கேட்கத்தான் அங்கு வேறு யாரிருக்கிறார்கள்'

தகரக் குவளையை வழித்து நக்கிச் சுற்றிலும் இறைந்து கிடந்த பருக்கைகளை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி விரலோடு சேர்த்து உறிஞ்சிச் சாப்பிட்டானதும் தனது--விரல்கள் குறைபட்ட--இரண்டு

கைகளாலும் தகரக் குவளையை இடுக்கி எடுத்துக் கொண்டு சாலையின் குறுக்காய், குளத்தை நோக்கி நடந்தான். கால்விரல்களுக்குப் பிடிப்பு இல்லாததால் குதிகால்களை அழுந்த ஊன்றித் தாங்கி தாங்கித்தான் அவனால் நடக்க முடியும் -- குளத்தின் மேல்படியில் காலிலிருந்த கான்வாஸ்ஷூஸ் நனையாமல் நின்றுகொண்டு, தகரக் குவளையை அலம்பி, ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்தான். தண்ணீரை 'மடக் மடக்' கென்று குடிக்கும்போது அவசரத்தில் குவளைக்கும் வாய்க்குமிடையே இரண்டு பக்கத்திலும் தண்ணீர் வழிந்து அவன்மேலிருந்த கோட்டின் காலரை நனைக்கவே அவசர அவசரமாகத் தண்ணீரைத் தட்டிக்கொண்டே கோட்டின் மார்புப் பையிலிருந்த பீடியையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்து வேறு பைக்கு மாற்றிக்கொண்டான். மேலேறி வந்த பிறகு தகரக் குவளையைக் கீழே வைத்துவிட்டு, நின்று ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொண்டான். புகையோடு சேர்த்துத் திருப்தியுடன் ஏப்பம் விட்டவாறு அவன் முனகிக் கொண்டான்.

'நல்லாத்தான் இருக்கு...' என்று வாய்விட்டு முனகிக் கொள்ளும்போதே மனசில் '--என்ன நல்லாருக்கு?' என்ற கேள்வியும் பிறந்தது.

"எல்லாம்தான். தோ... இந்த நெலா, இந்தக் குளம்... அடிக்கிற காத்து, குடிக்கிற தண்ணி...பசி,சோறு, தூக்கம்-எல்லாந்தான். வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கு... பீடிச் சொகம் ஒண்ணு போதுமே' " என்று நெருப்புகனியக் கனியப் புகையை வாய் நிறைய இழுத்து ஊதினான். சிறிது நேரம் நின்று ஏதோ யோசனைக்குப்பின் சத்திரத்துத் திண்ணைக்கு வந்து ஒரு மூலையில் தகரக் குவளையைக் கவிழ்த்து வைத்து விட்டு, சுவரோரமாகக் கிடந்த கந்தல் துணியால் தரையைத் தட்டிவிட்டு உட்கார்ந்தான்.

"உலகம் இவ்வளவு அழகாயிருக்கு. இதைப் பார்க்கற எம் மனசு சந்தோஷப்படுது. ஆமா, எல்லாப்பொருளும் பார்த்தவங்க மனசை

சந்தோஷப்பட வைக்கும்போது, நான்...நான் என்னைப் பார்த்தவுடனே ஒவ்வொருத்தர் முகத்திலேயும் ஏற்படற மாற்றம் இருக்கே, வியாதியாலே மரத்துப்போன என் உடம்புக்குத் தெரியாத வேதனை, பாவம் அவங்க மனசுக்குத் தெரியுது. அன்னக்கி ஒரு நாளு, ஒரு வீட்டுக்கு முன்னாடி போயி

அம்மா தாயே' பசிக்குது'ன்னு நின்னப்ப, சாப்பிட்டுட்டு எச்சில் இலை கொண்டுவந்து வெளியே போட்ட ஒரு பொண்ணு என்னைப் பாத்துட்டு வாந்திவர்ரமாதிரி குமட்டிக்கிட்டு உள்ளே ஓடினப்புறம், ஒரு ஆளு வந்து எட்டிப் பார்த்துட்டு சொன்னானே... 'அம்மா, வெளியே ஒரு தரித்திரம்வந்து நிக்குது; ஏதாவது போட்டு அனுப்பு. இவனெல்லாம் ஏன் தான் உசிரை வெச்சுக்கிட்டு இருக்கானோ இந்தத் தீராத நோயோடே' ன்னு...

"அந்த வார்த்தையைக் கேட்டவுடனே அங்கே நிக்க முடியாமத் திரும்பினப்போ, 'இந்தப்பா பரதேசி' ன்னு கூப்பிட்ட அந்தக் குரல் இருக்கே, அதிலே இருந்த ஆறுதல்தான் உலகத்திலே வாழணும்னு ஆசை குடுத்திடிச்சி... ராமலிங்கசாமி மாதிரி காதோரத்திலே முக்காட்டுத் துணியைச்செருகிக்கிட்டு கையிலே சோத்தோட எதிரே' என் பையன் கொஞ்சம் வாய்த்துடுக்கு...சாகறதும் இருக்கறதும் நம்ம கையிலா இருக்கு' ன்னு சொல்லிக்கிட்டே கொவளையிலே சோத்தைப் போட்டாங்க.. நான் அந்த அம்மா முகத்தையே பார்த்துக்கிட்டு நின்னேன்.

தன் மகனைப் பார்த்து, 'நீ சாகக்கூடாதா' ன்னு யாரோ கேட்டுட்ட மாதிரி அவங்க கண்ணில தண்ணி கொட்டிக்கிட்டே இருந்தது..."

--அன்றைக்குப் பிறகு அவன் பகலில் பிச்சைக்குப் போவதில்லை. இருட்டிய பிறகு யார் கண்ணிலும் படாமல் தலையில் முக்காடிட்டுக்கொண்டுதான் போவான். மூன்று வேளைக்கும் முதல்

நாளிரவு ஒருவேளை எடுத்த பிச்சைதான் சில நாட்களில் அதுவே அதிகமாகி அடுத்த நாளைக்கும் இருந்துவிடுவதும் உண்டு.

தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் நிறைவாக இருந்த வயிற்றைத் தடவி விட்டுக்கொண்டான். "சாப்பாடு கொஞ்சம் அதிகம்தான்..." என்று மறுபடியும் ஒரு ஏப்பம் விட்டவாறு, "முருகா" என்று எழுந்தான். தரையில் விரித்த கந்தலை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டினான். மூலையில் இருந்த தடியையும் கையில் எடுத்துக்கொண்டு ஏரிக் கரையை நோக்கி நடந்தான்.

"ம்...உடம்பிலே வியாதி இருந்தா என்ன? உசிரு இருக்கறது நல்லாத்தான் இருக்கு. நாக்குக்கு ருசியா திங்கிற சொகம்; கண்ணுக்குக் குளிர்ச்சியா பாக்கற சொகம்; காதுக்கு எதமா கேட்கற சொகம்...வியாதி இருந்தால் இதெல்லாம் கெட்டுப்பூடுதா?..."

ஏரிக்கரையின் ஓரமாக ரயில்வே லைன் மேட்டுச் சரிவில் தடிக்கம்பை ஊன்றியவாறு உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் பீடிப் புகையைக் காற்றில் ஊதிவிட்டான்...

"அப்பாடா' சாப்பிட்டவுடனே வயித்திலே என்னமோ ஒரு வலி' திங்கறதிலே ஒண்ணும் சொகமில்லே: ஆனா, தின்னாத்தான் சொகம். ஒடம்பிலே சேத்துக்கறதா சொகம்? உடம்பிலேருந்து எல்லாத்தையும் போக்கிக்கறதிலேதான் சொகம். உடம்பையே போக்கிக்கிட்டா?... சொகந்தான்' ஆனா, உடம்பிலே இருக்கிற சொரணையே போயிட்டா, சொகம் ஏது? "

இப்பொழுது அவன் முழங்காலளவு தண்ணீரில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான். நிலவும் நட்சத்திரங்களும் அவன் கண்களுக்கும் அழகாகத்தான் தெரிந்தன.

"ம்....தோ... அதான் சப்தரிஸி மண்டலம். அந்த நாலு நச்சத்திரம் சதுரமா இருக்கு; அதுக்கு ஓரமா வாலு மாதிரி மூணு நீட்டிக்கிட்டு இருக்கே; அந்த மூணுலே நடுவாலே இருக்குதே, அதுக்குத் தள்ளி மங்கலா.. அதான் அருந்ததி நச்சத்திரம்...சர்த்தான், நமக்கு ஆயுசு கெட்டி' அருந்ததி தெரியுதே... அம்மாஞ் சுளுவா எல்லாருக்கும் தெரியுமா அது? லேசா எழுதிக் கலைச்சிட்ட மாதிரி... புள்ளி மானத்திலே இருக்கா, கண்ணுலே இருக்கான்னு கண்ணைக் கசக்கிட்டு எங்கியுமில்லேன்னு சொல்லிடுவாங்க பலபேரு... அருந்ததியைப் பாத்தவனுக்கு ஆறுமாசத்துக்குச் சாவு இல்லேம்பாங்க..."

நிலவொளியில் பளபளத்துக்கொண்டிருக்கும் ஏரி நீரில் புரண்டு எழுந்து குளுமை பெற்றுவரும் தென்றல் காற்று அந்த வியாதிக்காரனின் உடலையும் தழுவத்தான் செய்தது. நீரின் அலைகள், சின்னஞ் சிறு கால்கள் சலங்கை அணிந்து சதிராய் நடந்து வருவதுபோல் தரையில் மோதி மோதித் தளதளக்கும் இனிய நாதத்தை அவன் செவிகளும் கேட்டன. கரையோரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுப் பூக்களின் நெடிமிக்க போதை மணம் அவனது நாசியையும் துளைக்கத்தான் செய்தது... அவன் வாழ ஆசைப்படுவதில் என்ன தவறு?

வெகு நேரத்திற்குப் பிறகு தண்ணீரிலிருந்து கரையேறி வந்து, அங்கு கழற்றிப் போட்டிருந்த கான்வாஸ் ஷஉஸை எடுத்து குனிந்து நின்று காலில் அணிந்துகொண்டான்; அப்படியே அவன் தலை நிமிரும்போது...எதிரே...

நீண்டுசெல்லும் இருப்புப் பாதையில் வளைந்து திரும்பும் அந்தக் கண்ணுக்கெட்டிய எல்லையில் வெளிச்சம் தெரிந்தது...ஒரு துண்டு வெளிச்சம்தான். அந்த ஒளிக்கீற்றின் அசைவால் தரையில்செல்லும் இருப்புப்பாதையிலும், வானில் செல்லும் தந்திக் கம்பிகளிலும் ஒரு

ஜொலிப்புத் துண்டம், விட்டு விட்டுத் தாவிச் செல்லுவது போலிருந்தது. தூரத்தில் ரயில் வருகின்ற ஓசை லேசாகக் கேட்டது.

"அடேயப்பா' மெயிலு வரானோ? மணி பன்னனெண்டா ஆயிடுச்சி' " என்று தண்டவாளத்தைக் கடப்பதற்காகக் கைத்தடியைச் சரிவில் ஊன்றித் தட்டுத் தடுமாறி ரயில்வே லைன் மேட்டின் மீது ஏறும்போது தூரத்தில்...

நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பும் கண்ணுக்கெட்டிய எல்லையில் இரண்டடி உயரத்திற்கு, வெளபுள்ளிளையாய் அசைகின்ற உருவம்...ஏதாவது மிருகமா? அல்லது...

கால்களை மண்டியிட்டு தரையில் ஊர்ந்து வந்த அந்த மனித உருவம், ரயில்வேலைன் மீது ஏறியதும் எழுந்து நின்றது. சுற்றிலும் ஒருமுறை பார்த்து, தன் பின்னால் பிச்சைக்காரன் வரும் திசையைப் பார்க்கத் திரும்பியபோது அதற்குள் நிற்க முடியாமல் கால்கள் நடுங்க, மெல்லக் கைகளைத் தரையில் ஊன்றித் தண்டவாளத்தின்மீது உட்கார்ந்துகொண்டது. பிறகு உறுதியுடன் இரண்டு தண்டவாளங்களுக்கும் குறுக்காக விறைத்து நீட்டிப் படுத்துக்கொண்டது.

"அடச்சே, மனுசப்பயதான் டோய்' உசிரை வெறுத்துட்டான் போல... ஐயையோ' உங்களுக்கு ஏண்டா புத்தி இப்படி போவுது? வெளிச்சம் வேகமா வருதே' " என்று பதறியவாறு, விரல்களில்லாத பாதங்களுக்குப்பாதுகாப்பாய் இருந்த கான்வாஸ் ஷூஸ் தேயத் தேய இழுத்தவாறு தாவித் தாவி ஓடிவந்த பிச்சைக்காரனின் செவிகளில் தூரத்து ரயில் சத்தம் பேரோசையாகக் கேட்டது.

ரயிலின் ஓசை சமீபித்துவிட்டது. பிச்சைக்காரன் ஓடி வந்த வேகத்தில், கண்களை இறுக மூடித் தண்டவாளத்தின் குறுக்காக விறைத்து நீட்டிக்

கிடந்தவனின் விலாவுக் கடியில் கைத்தடியைக் கொடுத்து, மயானத்தில் பிணத்தைப் புரட்டுவது போல் நெம்பித் தள்ளினான். அவனைத் தள்ளிய வேகத்தில், வியாதிக்காரன் இரண்டு உள்ளங் கைகளாலும் பற்றிப் பிடித்திருந்த கைத்தடி எகிறி விழுந்தது. தண்டவாளத்திலிருந்து உருண்டு எழுந்த அந்த இளைஞன் ஒன்றும் புரியாமல் எதிரிலிருப்பவனை வெறித்து விழித்தான். மறுபடியும் தன்னைத் தள்ளிவிட்டு அவன் ரயிலின் முன்னே போய் விழுந்துவிடுவானோ என்ற பயத்துடன் தனது கைகள் இரண்டையும் அகல் விரித்துக்கொண்டு அவன் மீது பாய்வதுபோல் நின்று, "வேணாம் ஐயா, வேணாம்' உசிரு போனா வராது..." என்று கெஞ்சினான் வியாதிக்காரன். அவன் முன்னே இரண்டு கால்களும் வெடவெடக்க உடலே நடுங்க நின்றிருந்தான் அந்த இளைஞன்.

அப்பொழுது 'ஹோ'வென்ற பேரிரைச்சலோடு வந்த மெயில்வண்டி, அந்த இருவரின் மீது தன் நிழலை ஏற்றி இழுத்தவாறு கடகடத்து ஓடியது. ரயிலின் பேரோசை அருகே அதிர்ந்து நகரும்வரை மௌனமாய் நின்றிருந்த இருவரும், ரயில் அவர்களை கடந்து போனபின் அதன் பின்புறத்தைப் பார்த்தனர். செக்கச் சிவந்த ஒற்றை விளக்கு ஓடி ஓடித் தூரத்தில் மறைந்தது. நின்றிருந்த இளைஞன் கால்கள் நிலைக்காமல் உட்கார்ந்துக்கொண்டான். வியாதிக்காரன் கையிலிருந்து எகிறிப் போன கைத்தடியைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தான். "யோவ்' உன்னைச் சொல்லி குத்தமில்லை ஐயா...இந்த எடத்து ராசி அப்படி' ஆமா, இந்த எடத்துக்கு ஒரு காவு வேணுமினு இருக்கு. ஒண்ணு ரெண்டு உன்னோட மூணு ஆச்சு, நாளைக்கிப் பொழுது விடியட்டும்; ரெண்டு எலுமிச்சம் பழத்தையாவது வாங்கி வெக்கணும். முந்தாநாளு அப்படித்தான்--ஏரிக் கரையிலே யாரோ ஒரு அம்மாவும் ஐயாவும் கொழந்தையை விட்டுட்டு கட்டுச்சோத்தை அவுத்து வெச்சிச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க... அதுக்கென்னா தெரியும் --பச்சைபுள்ளை' நடந்து நடந்து வந்து தண்டவாளத்திலே

ஏறிட்டுது...இந்த இடம்தான். ரயிலு வார நேரம்...அப்புறம், நான் பாத்துட்டேன்...வேற யாரையுங்காணோம். சர்த்தான், ஆபத்துக்குப் பாவமில்லேன்னு தொட்டுத் தூக்கிட்டேன்..." என்று சொல்லிவிட்டு ஒரு வநாடி மௌனமாகி நின்றான். பிறகு எதையோ நினைத்துப் பெருமூச்சுடன், ம்.....இருக்காதா...பெத்தவங்களுக்குத்தான் தெரியும் புள்ளை அருமை' " என்று தன் நினைவுக்கு அவனே சமாதானம் சொல்லிக்கொண்டு தொடர்ந்தான்; "எதுக்குச் சொல்ல வந்தேன்னா, இந்த இடத்து ராசி அப்படி இன்னக்கிக் காத்தாலே கூட ஒரு எருமை மாடு... ஆபத்துன்னு வந்தா மனுசனுக்கே புத்தி மாறிப்பூடுது. எருமை என்னா பண்ணும்? கூடுஸஉ வண்டி வந்துட்டான். இஞ்சினுக்காரன் ஊதறான்...ஊதறான்...இது என்னடான்னா, லைனைவுட்டு நவுறாம, நேரா ஓடிக்கினே இருக்குது. அவன் வந்த வேகத்திலே பிரேக் போட்டாப் புடிக்கிதா, என்னா எழவு?...ரயிலும் ஓடியாருது, எருமையும் ஓடுது. நானு ஒரு பக்கத்திலே ஓடி, கல்லுங்களை எடுத்து அடிச்சிக்கினே இருக்கேன். அப்புறம், சும்மா ஒரு மயிரிழையிலே தப்பிச்சிதுன்னு வெச்சிக்கியேன்..." என்று அந்த இடத்தின் ராசியை விவரித்தான் வியாதிக்காரன்.

அந்த இளைஞன் தலையைக் குனிந்து மௌனமாய் உட்கார்ந்திருந்தான். வியாதிக்காரன் ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். "நா" ஒருத்தன் இந்தப் பக்கந்தானே சுத்திக்கிட்டிருக்கேன்' இப்ப என்னடான்னா, ஏதாவது ஆடு கீடு வந்து நிக்குதோன்னு ஓடியாந்தேன்...நல்லவேளை; ஒரு மனுஷனைச் சாவுலேருந்து தடுத்தாச்சி...ம்...நாம்பளா தடுக்கறோம்?...ஒனக்கு இன்னம் ஆயுசு இருக்கு...என்னமோ, தடுக்கணும்னு இருக்கு, தடுத்தாச்சி...இல்லாட்டி, மனுசன் தடுத்தா வர்ர சாவு நின்னுடப்போவுது?" என்று வாயில் புகையும் பீடியுடன் தோளில் கிடந்த துண்டை எடுத்துத் தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டான்.

பிறகு, மண்ணில் தலைகுனிந்தவாறு காலை மடக்கிப்போட்டு உட்கார்ந்திருந்த அந்த இளைஞனை மௌனமாக உற்றுப் பார்த்தான். அவன் அழகாக இருந்தான்; நல்ல நிறம். தலைமயிர் நிலா வெளிச்சத்தில் கருகருவெனப் பளபளத்தது. வெளபுள்ளிளை ஷர்ட்; எட்டுமுழ வேட்டி உடுத்தியிருந்தான். அவன் தன்னைப் போல் பரம ஏழையோ, பிச்சைக்காரனோ, வியாதிக்காரனோ அல்லவென்று தோன்றியது. 'வறுமையோ பட்டினியின் கொடுமையோ அந்த இளைஞனிடம் தெரியவில்லை. பின் எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள வந்தான்?' என்று தெரிந்துக்கொள்ளத் துடித்தது வியாதிக்காரனுக்கு.

"சர்த்தான், எந்திரிச்சி வாய்யா' தோ...அங்கே சத்தரத்துத் திண்ணையிலே போயிக் குந்துவோம்...இந்தச் சத்தரம் இருக்கே..." என்று பேசிக்கொண்டே நடந்து திரும்பிப் பார்த்த பிச்சைக்காரன், அவன் இன்னும் எழுந்திருக்காமல் தூரத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். 'என்னாயா, குந்திக்கினே இருக்கியே? இனிமே அடுத்த ரயிலு காத்தாலே ஆறு மணிக்கு வடக்கே போற பார்சலுதான்; வா போவோம் ஒலகத்துலே மனுசன்னு பொறந்துட்டா கஸ்டமும் இருக்கும் சொகமும் இருக்கும். கஸ்டத்துக்குப் பயந்து செத்துபூட்டா, சொகத்தை அனுபவிக்கிறது யாரு? கஸ்டத்தைப் பார்த்து சிரிக்கணுமய்யா. ஏன்னா, கஸ்டம் வருதுன்னா பின்னாடிச் சொகம் காத்துக்கிட்டு இருக்குதுன்னு அர்த்தம்...ம், எழுந்திரு, போலாம்..." என்று உற்சாகமாகப் பேசும் பிச்சைக்காரனை நிமிர்ந்து பார்த்துக் கலங்குகின்ற கண்களோடு முகத்தில் பரிதாபகரமான புன்சிரிப்போடு அந்த இளைஞன் எழுந்திருப்பதற்கு முன்னால் உதவிக்குக் கை நீட்டினான்.

"தெய்வமே'... இவன் கையை புடிச்சி நான் தூக்கறதாவது?' என்று விலகிக்கொண்டான் பிச்சைக்காரன். அந்த இளைஞன் தன்

முயற்சியால் கைகளை ஊன்றி ஒருவாறு எழுந்து நின்றான். பிறகு நிதானித்து, காலைப் பதனமாக ஊன்றி மறு காலை உயர்த்தும்போது தடுமாறி விழ இருந்தவன், பிச்சைக்காரனின் தோள்களைப் பிடித்துக்கொண்டு நின்றான். அவன் பிடித்த வேகத்தில் நிலைகுலைந்த பிச்சைக்காரன் சமாளித்தவாறு, அப்பொழுதுதான் அந்த இளைஞனின் கால்களைப் பார்த்தான். அவை பார்ப்பதற்கு ஒழுங்காக இருப்பன போன்று தோன்றின. என்றாலும் கணுக்காலில், தொடைகள் சேர்கின்ற இடம் முழுதும் -- முழங்கால் மூட்டுக்கள் உறுதியற்று நடுங்கிக் கொண்டிருந்தன. முழங்காலுக்கு கீழே நான்கு புறமும் மடங்கும் தன்மையுடன் கால்கள் தொளதொளத்துச் சூம்பிக் கிடந்தன.

சற்று நேரத்துக்குமுன் தூரத்துப் பார்வைக்கு இரண்டடி உருவமாய்க் குறுகித் தெரிந்த அந்த உருவம் நினைவுக்கு வந்தது பிச்சைக்காரனுக்கு. அந்த இளைஞன் நடக்க முடியாமல் மண்டியிட்டுத் தவழ்ந்து வந்திருக்கிறான் என்பதை யூகித்து, "இந்தாய்யா' இந்த கம்பை வச்சிக்கிட்டு நடக்கிறியா?" என்று கைத்தடியைக் கொடுத்தான்.

"ஊஹூஉம், முடியாது. இப்பிடியே வர்ரேன்...நீ நடந்தா நானும் வருவேன்..." என்று அவன் தோள்களை இறுகப் பற்றியவாறு கூறினான் நொண்டி.

வியாதிக்காரன் லேசாகச் சிரித்தான். "கம்பு இல்லாம நானும் நடக்கமுடியாது...இருந்தாலும் சமாளிச்சிக்கிடலாம்னுதான் குடுத்தேன்...கையிலே கம்பு இருந்தா உன்னைத் தூக்கிக்கிட்டுகூட நடப்பேன்...வா போவோம்" என்று கைத்தடியைப் பூமியில் உறுதியாய் ஊன்றித் தாங்கித் தாங்கி நடந்த வியாதிக்காரனின் தோளில் தொங்குவதைப்போல் பிடித்துக்கொண்டு ஊனக் கால்களைத் தத்தித் தத்தி இழுத்தவாறு நகர்ந்தான் நொண்டி.

"ஐயா..."

"ம்...."

"ரொம்பப் பாரமா இருக்கேனா?....உம்....உம்...பார்த்து...."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே....பயப்படாம வா..."

"இப்பிடி எல்லாருக்கும் பாரமா இருக்கப் பிடிக்காமத்தான்...பிடிக்காமத்தான்..." என்று விம்மினான் நொண்டி.

---உசிரையே விட்டுடலாம்னு பாத்தியா? ஏய்யா எப்பப்பார்த்தாலும் உன்னைப் பத்தியே உனக்கு நெனப்பு?..."

"என்னாலே எல்லாருக்கும் கஷ்டம்தான்..."

அவர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

நொண்டியும் வியாதிக்காரனும் நிலா வெளிச்சம் இறங்கிக் கொண்டிருக்கும் திண்ணையில் படுத்திருந்தனர். வியாதிக்காரன் பாதிபடுத்தும் பாதி படுக்காமலும் தூணில் சாய்ந்து கால்களை நீட்டிக்கொண்டு பீடி புகைத்துக்கொண்டிருந்தான்..

"பீடி குடிக்கிறியா ஐயா?"

"வேண்டாம்; பழக்கமில்லை..." என்று குப்புறப் படுத்திருந்த நொண்டி பதில் சொன்னான். திடீரென்று குப்புறக் கிடந்த முகத்தைத் திருப்பி வியாதிக்காரனைக் கேட்டான் நொண்டி: "கஷ்டத்துக்கு அப்புறம்தான் சோகம்னு சொன்னியே...எனக்கு இனிமே ஏது சோகம்? சோகமே வராதுன்னு தெரிஞ்சும் எதுக்கு நான் இருக்கணும்?"

"சோகமே வராதுன்னு முடிவு சொல்லறதுக்கு நீ யாரு? கஷ்டம் வரப் போவுதுன்னு நீயா முன்கூட்டியே சொன்னே? அது திடீர்னு வந்தமாதிரி இது வராதா'....அதெல்லாம் அவன் பார்த்துச்

சொல்லணும்" என்று வானத்தை நோக்கிப் புகையை ஊதினான் பிச்சைக்காரன்.

வியாதிக்காரனுக்கே தான் சொன்ன பதில் நொண்டியின் மனச் சமாதானத்துக்குத்தான் என்று தெரிந்தது.

"சாகப் படாது ஐயா...அதான் ஒரு நாளைக்கு எல்லாருமே சாகப் போறமே?... அதுவரைக்கும் இருந்துதான் சாவமே..." என்று சமாதானம் கூறினான். "அது சரி; நீ பாட்டுக்குச் சாகறதுக்கு வந்துட்டியே...உனக்கு தாயி, தகப்பன், குடும்பம்னு ஒண்ணுமில்லியா? என்னை மாதிரி அநாதைதானா?" என்றான் வியாதிக்காரன்.

"அம்மா..." என்று பெருமூச்செறிந்தவாறு எழுந்து உட்கார்ந்த நொண்டி, சில விநாடிகள் மௌனமாய்த் தலை குனிந்திருந்துவிட்டு, விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

"வருத்தப்படாதே ஐயா" என்று ஆறுதல் கூறினான் பிச்சைக்காரன். முகத்தைத் துடைத்துக் கொண்டு சொன்னான் இளைஞன்.

"அதோ தெரியுது பாரு" என்று ரயில்வே லைனுக்கு நேரே வரிசையாகத் தெரியும் சில வீடுகளின் கொல்லைப்புறத்தைக் காட்டி, "அங்கேதான் எனக்கு வீடு. அம்மா இருக்காங்க, தம்பி இருக்கான். தம்பிக்கிக் கல்யாணமாகிக் கொழந்தைகள்கூட இருக்கு. என்னாலேதான் யாருக்கும் உதவியுமில்லே, சந்தோஷமுமில்லே. நான் வயித்திலே ஜனித்ததிலிருந்து எங்க அம்மா என்னைச் சுமந்துகிட்டே இருக்காங்க. அம்மாவுக்கு ஒரே நம்பிக்கை--எனக்கு காலு வந்திடும்னு...எப்பப் பார்த்தாலும் தம்பிகிட்டே 'அந்த டாக்டரைப் பார்க்கணும்னு பணத்தை வாங்கிக்கிட்டு டாக்டர்களைப் பார்த்ததுதான் மிச்சம். அவன் என்ன பண்ணுவான்?...வரவரத் தம்பியும் குடும்பஸ்தனாக மாறிப்

புள்ளைகளும் பெண்டாட்டியுமா ஆனப்புறமும் நான் ஒரு சொமையா இருக்கிறதா? எனக்காக அம்மாவும் தம்பியும் தினம் சண்டை போடறாங்க...தம்பி கோவத்திலே என்னை நொண்டின்னு சொல்லிட்டான். அம்மா, 'ஓ' ன்னு அழுதுட்டாங்க' என்று நொண்டி சொல்லும்போது வியாதிக்காரனின் மனசில், ராமலிங்கசாமி மாதிரி காதோரத்திலே முக்காட்டுத் துணியைச் சொருகிக்கொண்டு 'பரதேசி' ன்னு கூப்பிடும் அந்த குரலும் முகமும் தோன்றின. நீட்டிய காலகளின் முழந்தாள் முட்டுகளைப் பிசைந்துகொண்டே சொன்னான் நொண்டி:

"நேத்து ஏதோ ஒரு நாட்டு வைத்தியர் இந்தமாதிரிக் குறையெல்லாம் தீத்து வைக்கிறார்னு யாரோ சொன்னாங்க -- அம்மா கையிலே இருந்த காசை முந்தானையிலே முடிஞ்சுண்டு 'வாடா' ன்னு உசிரைவாங்கி என்னை அழைச்சிண்டு போறப்ப நான் என்ன பண்ணுவேன், சொல்லு, சரின்னு அம்மா தோள்லே தொத்திண்டு போனேன். அந்த வைத்தியன் இருக்கிற இடம் நாலு மைல் இருக்கு...பஸ்ஸிலதான் போகணும்...போனோம்...அம்மா ஆசையிலே, வழக்கம்போல இல்லாம ஒரே தடவையிலேயே மண்ணு விழுந்திட்டுது...என் காலைப் பாத்துட்டு முடியாதுன்னுட்டான் அவன். 'இவன் ஒண்ணும் நல்ல வைத்தியன் இல்லே...ஊரை ஏமாத்தறவன்' னு என்னை அழைச்சிண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்துட்டாங்க அம்மா... பஸ்ஸிலே ஒரே கூட்டம்..."

ஒரு நிமிஷம் பேச்சை நிறுத்திக் கண் கலங்க எங்கோ பார்த்தவாறு வெறித்த விழிகளுடன் நெஞ்சில் பெருகி, தொண்டையில் அடைத்த துயரை விழுங்கினான் நொண்டி. அவன் வாழ்வின் மீது கொண்ட வெறுப்புக்கெல்லாம் எந்த ஒரு நிகழ்ச்சி காரணமாய் அமைந்து அவனைச் சாவின் பீடத்துக்குக் கொண்டு வந்து தள்ளியதோ -- அந்த நிகழ்ச்சி மனசில் தெரிந்தது. அதை மனசால் பார்த்துக்கொண்டே வியாதிக்காரனிடம் விவரித்தான் நொண்டி.

அந்த காட்சி --

வெளபுள்ளிளைப் புடவையுடுத்தி முக்காடிட்ட அந்த வயோதிகத் தாயின் தோளைப் பற்றி, தன்னுடலின் முழுப் பாரத்தையும் அவள் மேலே சுமத்திக்கொண்டு, "கட்டாலே போறவன்; யாராரோ சொன்னாளேன்னு நம்பி வந்தேன். இவன் ஒண்ணும் வைத்தியன் இல்லே; பில்லி சூனியம் வைக்கறவன்... நீ கவலைப்படாதேடா கண்ணா' நான் உன்னை அடுத்த மாசம் வேலூர் மிஷன் ஆஸ்பத்திரிக்கி அழைச்சிண்டு போயி..." என்று ஏதோ சொல்ல வரும்போது, அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக்கொள்வதுபோல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொன்னான் மகன்:--

"எனக்குக் 'காலில்லையே'ங்கற கவலைகூட இல்லேம்மா; நீ எனக்காகப்படற சிரமத்தைப் பார்த்தாத்தான் ரொம்பக் கஷ்டமா இருக்கம்மா..." என்று விம்முகின்ற குரலோடு அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக்கொண்டே இருக்கும்போது, பஸ் வந்தது.

"கண்ணா, கெட்டியாப் பிடிச்சுக்கோ...பாத்து, பாத்து...இதோ, இப்பிடி உட்காந்துக்கோ" என்று மகனைச் சுமந்து இழுத்தவாறு பஸ்ஸில் அவள் ஏறுவதற்குள், முன்பக்கத்தில் டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்த கண்டக்டர்,"ஆச்சா? எவ்வளவு நாழி?" என்று அவசரப்படுத்தினான். ஒருவாறு சிரமத்திற்குப்பின் பஸ்ஸில் ஏறியதும், எதிரில் இருந்த இருவர் உட்காரும் ஸீட்டில் மகனைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு உட்கார்ந்தாள் அம்மா.

பஸ் போய்க்கொண்டிருக்கும்போது, அவனது தாய் சேலைத் தலைப்பிலிருந்த சில்லறையை எடுக்கும்போது, அவன் அகஸ்மாத்தாகத் திரும்பும்போது அவர்கள் ஸீட்டுக்கு மேலே எழுதியிருந்த 'பெண்கள்' என்ற வாசகம் அவன் கண்களில் பட்டது. அப்பொழுது ஒரு ஸ்டாப்பில் பஸ் நின்றது. அழகிய இளம் பெண்ணொருத்தி பஸ்ஸில் ஏறினாள். அவளைப் பார்த்தவாறே

அருகில் வந்தான் கண்டக்டர். நொண்டி ஒரு விநாடி பெண்ணைப் பார்த்தான்; அவளது இடத்தில் தான் உட்கார்ந்திருப்பதை உணரும்போது அவனது ஆண்மை உணர்ச்சி அவனுள் ரகசியமாக வதைபட்டுக் கொண்டிருக்கும் அதே சமயம், அதைக் கொல்லுவதுபோல் கண்டக்டரின் குரல் ஒலித்தது: "இந்தாய்யா ஆம்பளே' பொம்மனாட்டி நிக்கிறாங்க இல்லே?"

அந்த நொண்டி திடீரென்று கால்கள் வந்துவிட்டது போல் எழுந்து நின்றான். அவன் எழுந்த வேகத்தில் அந்தப் பெண் அந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டாள். எழுந்து நின்ற நொண்டியின் கால்கள் நடுங்கின...

"ஐயா'...ஐயா' "என்ற தாயின் பரிதாபகரமான குரல் கண்டக்டரையும், அந்த பெண்ணையும் பஸ்ஸிலுள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இன்னொருவர் சொல்லித்தன் காதால் கேட்கப் பொறாத அந்த வார்த்தையை அவளே சொல்லவேண்டிய நிர்ப்பந்தம்... "ஐயா' அவன் நொண்டி ஐயா' நிக்க முடியாதையா'...." என்று சொல்லிக் கண்களில் வழிந்த கண்ணீருடன் எழுந்து தன் இடத்தைக்காட்டி, "கண்ணா, நீ இப்படி உக்காந்துக்கோடா" என்று சொல்லும்போது தடுமாறி விழ இருந்த மகன், தாயின் தோளைப் பிடித்துக்கொண்டு சொன்னான்; 'இல்லேம்மா, நான் நிப்பேன்."

"உன்னாலே முடியாது கண்ணா" என்று அந்தப் பெண்ணின் பக்கத்தில் மகனை உட்கார வைத்து அந்தத் தாய் நிற்கும்போது, அந்தப் பெண் எழுந்து அவன் தாயிடம் மன்னிப்புக் கேட்பதுபோல், "நீங்க உக்காருங்க அம்மா" என்று வற்புறுத்திக் கெஞ்சினாள். கண்டக்டரின் முகம் அழுவதுபோல் மாறிவிட்டது "ஸார், மன்னிச்சுக்குங்க, எனக்கு முதல்லே தெரியலை ஸார்..." என்று நொண்டியிடம் குனிந்து சொன்னான். நொண்டி யாருக்கும் ஒன்றும் பதில் சொல்லாமல், யார் முகத்தையும் பார்க்காமல், பக்கத்தில் அமர்ந்திருந்த தாயின் பின்னால்

ஒரு குழந்தையைப்போல் முகம் புதைத்து, அழுகையை அடக்கி, நெற்றியை அவள் தோளில் தேய்த்துக் கொண்டே இருந்தான்.

பஸ் போய்க் கொண்டிருந்தது. பஸ்ஸிலிருந்த எல்லோரின் அநுதாபமும் அவன் நெஞ்சில் கனமேற்றி அவன் உயிரையே அரிப்பதுபோல்...

---நொண்டி சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் மௌனமாய்க் கேட்டவாறிருந்த வியாதிக்காரன் தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

'இவனுக்கு இன்னும் வயசு இருக்கு, வாழ்க்கை இருக்கு... இவனுக்கு ஒரு கஸ்டம்னா வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவுக்காரங்க இருக்காங்க. இவன் வாழணுன்னு ஆசைப்படறதுக்கு அன்பான தாய் இருக்கா...இவன் நொண்டின்னு தெரிஞ்சு அன்பு காட்ட, பரிதாபப்பட, பிரியம்காட்ட உலகமே இருக்கு....இவன் எதுக்கு சாகணும்?' என்று ஆரம்பித்த மனம் தன்னைப்பற்றி எண்ணும்போது...

'எனக்கு யார் இருக்கா? எனக்கு ஒரு கஸ்டம்னா, வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவு இருக்கா? உறவுங்கெல்லாம் உதறித்தள்ளி எத்தனையோ காலம் ஆயிடுச்சே? நான் வாளணும்னு ஆசைப்படற ஜீவன் என்னைத் தவிர இன்னொண்ணு உண்டா? எனக்கு அன்பு காட்ட, பரிதாபப்பட, பிரியங்காட்ட யார் இருக்கா? உலகமே வெறுத்து முகம் சுளிச்சு என்னைப் பாக்குது' என்றெல்லாம் எண்ணி மௌனமாய் உட்கார்ந்திருந்தான் வியாதிக்காரன்.

நொண்டியின் இமைகளைத் தூக்கம் அழுத்த, அவன் கொட்டாவி விட்டான். அந்த சப்தம் கேட்டு வியாதிக்காரன் நொண்டியைப் பார்த்தான், "இந்தாய்யா, நீ சாகப்படாது,....சொல்லிட்டேன். ஒனக்குக்

காலு இல்லேங்கிற நெனப்பினாலேதான் நீ கஸ்டப்படறே, மத்தவங்களையும் கஸ்டப்படுத்தறே."

"நான்தான் சொல்றேனே, எனக்குக் காலில்லாம மத்தவங்களுக்குத் தான் பாரமா இருக்கேனே' எங்கம்மா வைத்தியனுக்குன்னு தம்பியைப் பணம் கேக்கறப்போ அவங்க ரெண்டு பேருக்கும் என்னாலே எவ்வளவு சண்டை' எவ்வளவு வருத்தம்' " என்று நொண்டி சொல்ல, குறுக்கிட்ட வியாதிக்காரன், "ஆமாய்யா, நீ சதாநேரமும் உங்கம்மா தோளைப் புடிச்சுத் தொங்கிக்கிட்டே இருந்தா அப்படித்தான் சண்டை வரும். காலு இல்லாட்டிப்போனா என்னாய்யா? கையாலே இந்த உலகத்தையே வளைக்கலாமே' வாழ்றத்துக்குக் காலும் கையும் வேணாமய்யா. நல்ல மனசு வேணும், அறிவு வேணும். மனுசனோட அறிவு யானையைக் காட்டிலும் சிங்கத்தை காட்டிலும் வலுவானது. இல்லேங்கறதுக்காகச் செத்து இருந்தா மனுச சாதியே பூண்டத்துப்போயிருக்கும். காலு இல்லாட்டி அது இல்லாத் கொறையை மாத்திக்கிட்டு எப்படி இருக்கிறதுன்னு யோசிக்க ஆரம்பிச்சேன்னா, காலு இருக்கிறங்களைக்காட்டிலும் நீ வேகமா ஓடிடமாட்டியா?

"மனுசனுக்கு ரெக்கை இருந்திருந்தா அவனும் பறந்துகிட்டிருப்பான். ரெக்கை இல்லாததனாலேதான் 'விர்ரு விர்ரு' ன்னு இப்ப ஏரோப்ளேன்லே பறக்கிறான். இன்னும் மானத்துலே எங்கெங்கேயோ போயி என்னென்னாத்தையோ புடிக்கிறான். இல்லேன்னு சாவறதா? உங்கம்மாவேதான், என் மகனுக்குக் காலு இல்லாட்டி என்னா, என்னென்னா காரியம் பண்றான்னு நெனைக்க வெச்சிட்டியினா அவுங்க ஏன் உன் தம்பிகிட்டே போயி வம்புக்கு நிக்கப் போறாங்க? நீ என்னா என்னை மாதிரி தீராத நோயாளியா? நானே வாழறப்போ நீ சாகப்போறேங்கறியே..." என்று சொல்லும்போது வியாதிக்காரனின் தொண்டை அடைத்தது. அவனது பேச்சால் வியாதிக்காரனின்

நெஞ்சிலிருந்து, வாழவேண்டுமென்ற ஆசை, வாழ முடியும் என்ற நம்பிக்கை நொண்டியின் இதயத்தில் தொற்ற ஆரம்பித்தது. நொண்டி புதியதோர் நம்பிக்கையுடன் தலை நிமிர்த்தி வியாதிக்காரனைப் பார்த்தான். வியாதிக்காரன் தொடர்ந்தான்.

"நீ என்னமோ சொல்றியே, பஸ்ஸிலே உன்னை எந்திரிக்கச் சொன்னான், அப்புறம் உட்காரச் சொன்னான்னு... அதுக்காக உன் மனசு கஸ்டப்பட்டது, நாயந்தான். தோ, என்னைப்பாரு. என்னை அந்த பஸ்ஸிலே ஏறவுடுவானாய்யா? நீ என்னைப் பகல்லே பாத்தா இப்பிடி பக்கத்திலே உக்காந்து பேசக்கூட மாட்டே, தோ... வெளிச்சத்திலே பாரு இந்தக் கையை" என்று தன் குறைபட்ட கைகளை மேலே இருந்த கோட்டை இழுத்து விட்டுக் கொண்டு நிலா வெளிச்சத்தில் நீட்டி விம்மினான்: "இந்தக் கை கொஞ்ச நாளைக்கு முன்னே முழுசா இருந்தது. உனக்குக் காலு இல்லே-- அவ்வளவுதான். எனக்கு இருக்கிறதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இல்லாமாப் போயிக்கிட்டே இருக்கு... இந்தக் கையாலே முந்தாநாளு ஒரு கொழந்தையைத் தூக்கிட்டேன். கொழந்தையைத் தூக்கணும்கிற ஆசையினாலேயா தூக்கினேன்? சீ அந்த ஆசை எனக்கு வரலாமா? தண்டவாளத்திலே வந்து நிக்குதே, ரயிலு வர்ர நேரமாச்சேன்னு பதறித்தூக்கிட்டேன். நான் வியாதிக்காரந்தான். என் உடம்பிலே சொரணைன் அத்தே போயிடுச்சி. ஆனாலும் ஒரு குழந்தையை தூக்கறோம்கிற நெனைப்பிலேயே என் மனம் சிலிர்த்துப் போச்சு... ஆனா, ஆனா.... அதுக்காக அந்தப் பெத்தவங்க என்னை அடிக்க வந்துட்டாங்க, தெரியுமாய்யா?... மனுசனாப் பொறந்தும், மனுசனுக்குள்ள எந்தச் சொகத்தையும், எந்த உரிமையையும் அனுபவிக்க முடியாம் நான் வாழறேனே... ஒரு பிசாசு மாதிரி தனியா குந்திக்கிட்டு, வாழறதா நெனச்சி என்னையே ஏமாத்திக்கிறேனே"

என்று சொல்லும்போது கொஞ்சம் கொஞ்சமாக விம்ம ஆரம்பித்து விக்கிவிக்கி அழுதான் வியாதிக்காரன்.

சற்று நேரத்திற்குப்பின் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு வரண்ட சிரிப்புடன் சொன்னான்: "ஆமா, பெத்தவங்களுக்குத் தெரியும் புள்ளை அருமை.... சாவைக் காட்டிலும் கொடியது இல்லையா, இந்த நோயி? அப்புறம் விஷயத்தைச் சொன்னப்புறம் ஒருமாதிரி சமாதானம் ஆனாங்க...அப்பக்கூட, 'ஒரு கொரலு, எங்களைக் கூப்பிட வேண்டியதுதானே...நீயா தூக்கறது?'ன்னு கேட்டிச்சி ---அந்த அம்மா. 'நீங்க சொல்றது நாயந்தான். தெரியாம செஞ்சிட்டே' ன்னு மன்னிப்பு கேட்டுகிட்டு வந்தேன், ஏன்னா, இது பொல்லாத நோயி, மனுசனுக்கு வரக்கூடாது; ஆரம்ப காலம்னா தீத்துடலாம். இது ரொம்ப முத்தின கேஸஉ' இனிமே கொறையாது; பரவும். மத்தவங்க ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். ஒரு தாய்க்குத் தன் குழந்தை செத்தாலும் பரவாயில்லே; இந்த நோய்வரப் பொறுக்கமாட்டா" என்று அவன் தன்னையுணர்ந்து தனக்குள் முனகுவதுபோல் பேசினான்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு நொண்டி இரண்டாவது முறை கொட்டாவி விட்டான்.

"தூக்கம் வருதா? படுத்துக்க, ஐயா' தூங்கர்து ரொம்பச் சொகம். செத்தாத் தூங்கமுடியாது, கேட்டுக்க, பொழுது விடிஞ்சி பெத்த மகராசிக்குப் புள்ளையாப் போய்ச் சேரு' உனக்கு நான் கடைசியாச் சொல்றது இதுதான்: காலு இல்லேன்னு நெனச்சி நீ யாருக்கும் பாரமா இருக்காதே. இப்ப யாரோட துணையுமில்லாம எப்பிடி சாக வந்தியோ, அந்த மாதிரி வாழப் போ. அதிலே ஒண்ணும் வெக்கப்படவேணாம். உன்னையே பாத்து உங்கம்மா மகிழ்ந்து போவாங்க, பாரு..." என்று, அணைந்திருந்த கடைசிப் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான் வியாதிக்காரன். படுத்த சற்று நேரத்துக்கெல்லாம் நொண்டி தூங்கிப் போனான். வியாதிக்காரன் தூக்கம் வராமல், கீழே கிடந்த துண்டுப்

பீடிகளைப் பொறுக்கிப் பற்றவைத்துக் கொண்டு தூணில் சாய்ந்து வானத்தை வெறித்தவாறு உட்கார்ந்திருந்தான்.

"அதோ, ரொம்ப தூரம் தள்ளி வந்திருச்சே சப்தரிஸி மண்டலம்...நாலு நச்சத்திரச் சதுரத்திக்கு ஓரமா, வாலு மாதிரி இருக்கற மூணுக்கு நடுவாலே, ஓரத்திலே, ஆமாமா, அருந்ததி...அருந்ததியைப் பார்த்தவனுக்கு ஆறு மாசத்துக்குச் சாவில்லே' அடிச் செருப்பாலே' இன்னும் ஆயுசு அதிகம் வேணுமா என் கட்டைக்கி?" என்று விரக்தியும் வேதனையும் குழைய முனகிக்கொண்ட வியாதிக்காரன், கையிலிருந்த பீடியைத் தரையில் நசுக்கித் தேய்த்தான். அவன் பார்வை சப்தரிஷி மண்டலத்தை வெறித்தது.

விடிந்து ஆறு மணிக்கு வடக்கே போகும் பார்சல் வண்டியின் அவலமான கூக்குரல் கேட்டு, சத்திரத்துத் திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்த நொண்டி கண் விழித்தான்.

அவனருகே வியாதிக்காரனின் கறை படிந்த கந்தலும், பளபளப்பான புதிய தகரக் குவளையும் தனியாகக் கிடந்தன. அங்கே ஈக்கள் மொய்த்தன.

தூரத்தில், நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பும் எல்லையில் புகை கக்கி அழுதவாறு பார்சல் வண்டி நின்றிருந்தது' அங்கு மனிதர்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

"இங்கே சுத்திக்கினு இருப்பானே -- அந்தப் பெருவியாதிக்காரன், ரயிலு முன்னாடி போயி விழுந்துட்டான்'..."

"அவன் எனக்கு வாழக் கற்றுக் கொடுத்தான்; நான் அவனுக்குச் சாகக் கற்றுக் கொடுத்தேன். அவன் என்னைச் சந்திக்காமல் இருந்திருந்தால்?" --நொண்டியின் கண்கள் கலங்கின.

"அந்த இடத்தின் ராசியோ?--தன்னையே காவு தந்து இன்னொரு விபத்து ஏற்படாமல் தடுக்க முயற்சியோ? அவன் மேனியிலிருந்ததா பயங்கர தொத்து வியாதி?...இல்லை; என் மனசில் தோன்றியதே---தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் --அந்த 'வாழ்க்கையின் வெறுப்பு' த்தான் பயங்கர வியாதி...அதற்கு அவன் பலியாகிவிட்டான்."

திடீரென்று ரெயில்வே லைனுக்கு அப்பால் வரிசையாகத் தெரியும் வீடுகளின் கொல்லைப்புறக் கதவுகளைத் திறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோரின் நடுவே இருந்து, "ஐயோ' கண்ணா' " என்ற அலறல் ரயில்வே லைனுக்கு அப்பால் வெகு தூரத்திலிருந்த நொண்டியின் வயிற்றைக் கலக்கியது.

"அம்மா' நான் இருக்கிறேன்....அம்மா' " என்று கோஷித்தவாறு வேகமாய்த் தவழ்ந்தோடினான் அவள் மகன்.

"மகனே'....மகனே'..." என்று ரயில்வே லைன் மேட்டின் மீது விழுந்து புரண்டு கொண்டிருந்த அவன் தாய் 'நான் இருக்கேன்' என்ற குரல் கேட்டு அவனைப் பார்த்து ஒன்றும் புரியாமல் அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு கண்ணீருடன் சிரித்தாள். பிறகு, "யார் பெத்த மகனோ' " ரயில் சக்கரத்தைப் பார்த்து அழுதாள்.

அவள் அருகே வந்த அவள் மகன் அவள் தோளில் முகம் புதைத்து நெற்றியைத் தேய்த்து அழுதுகொண்டே சொன்னான்: "அம்மா' நான் இருக்கேம்மா...அது உன் மகனில்லே... அது. அந்த மனுஷன்...அவன் செத்திருக்கக் கூடாது அம்மா....ஆ'...." என்று பெருங்குரலில் கதறி அழுதான் நொண்டி.

முற்றும்

ஜெயகாந்தன் 10

https://www.hindutamil.in/news/blogs/202754-10.html

ஞானபீட விருது பெற்ற தமிழ் படைப்பாளி

ஞானபீட விருது பெற்ற சிறந்த தமிழ் படைப்பாளியான ஜெயகாந்தன் (Jayakanthan) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 24). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் விவசாயக் குடும்பத்தில் (1934) பிறந்தார். இயற்பெயர் முருகேசன். பள்ளிப் படிப்பில் அவ்வளவாக நாட்டம் இல்லாததால், 5-ம் வகுப்போடு படிப்பு நின்றது. பிறகு விழுப்புரத்தில் மாமா வீட்டில் வளர்ந்தார்.

* பொதுவுடைமைக் கோட்பாடுகளை யும் பாரதியாரின் எழுத்துகளையும் மாமாவின் வாயிலாக அறிந்தார். சிறிது காலத்துக்குப் பிறகு சென்னையில் குடியேறினார். ஜனசக்தி அலுவலக அச்சகத்தில் பணியாற்றினார். அங்கு பல தலைவர்கள் பேசுவதைக் கேட்டு இலக்கியத்தில் நாட்டம் பிறந்தது.

* வேலை செய்துகொண்டே புலவர் க.சொக்கலிங்கத்திடம் தமிழ், இலக்கிய, இலக்கணங்கள் கற்றார். காமராஜரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். கடைகள், மாவு மில், தியேட்டர் என பல இடங்களில் வேலை செய்தார். கைவண்டி இழுத்தார். இதற்கிடையில், ஓய்வு நேரத்தில் எழுதும் பழக்கம் கொண்டிருந்தார்.

* இவரது முதல் சிறுகதை 1950-ல் 'சௌபாக்கியம்' என்ற இதழில் வெளிவந்தது. தொடர்ந்து பல இதழ்களில் எழுதினார். 'சரஸ்வதி' இதழில் இவரது படைப்புகள் வெளிவரத் தொடங்கிய பிறகு, ஓரளவு

பிரபலமானார். ‘தாமரை’, ‘கிராம ஊழியன்’, ‘ஆனந்த விகடன்’, ‘கல்கி’, ‘குமுதம்’ உள்ளிட்ட இதழ்களிலும் இவரது கதைகள் வெளிவந்து வரவேற்பை பெற்றன.

* 1958-ல் வெளிவந்த இவரது ‘ஒரு பிடி சோறு’ சிறுகதை இலக்கிய வாதிகளின் பரவலான பாராட்டைப் பெற்றது. இவர் பல்வேறு இதழ்களுக்கு அளித்த பேட்டிகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது. தனது அரசியல், கலையுலக, இதழியல், ஆன்மிக அனுபவங்களைத் தனித்தனி நூல்களாகப் படைத்தார்.

* ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’, ‘ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்’, ‘ஊருக்கு நூறு பேர்’ உள்ளிட்ட இவரது படைப்புகள் திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டன. ‘உன்னைப் போல் ஒருவன்’, ‘யாருக்காக அழுதான்’, ‘புதுச்செருப்பு கடிக்கும்’ ஆகிய திரைப்படங்களை இவரே இயக்கினார்.

* ஏறக்குறைய 200 சிறுகதைகள், 30-க்கும் மேற்பட்ட குறுநாவல்கள், 17 நாவல்கள், ஏராளமான கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் என நிறைய எழுதினார். இவர் எழுதிய முன்னுரைகள் தொகுக்கப்பட்டு தனி நூலாக வெளியிடப்பட்டது. இவரது பல படைப்புகள் இந்திய மொழிகள் உட்பட உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

* ராஜராஜன் விருது, பாரதிய பாஷா பரிஷத் விருது, 1972-ல் சாகித்ய அகாடமி விருது, 2002-ம் ஆண்டுக்கான ஞானபீட விருது ஆகிய விருதுகளைப் பெற்றார். 2009-ல் பத்மபூஷண் விருது பெற்று இலக்கியத்துக்காக பத்மபூஷண் விருது பெற்ற முதல் படைப் பாளி என்ற பெருமை பெற்றார். ரஷ்ய விருதையும் வென்றார்.

* இவருக்கு நன்றாக வீணை வாசிக்கத் தெரியும். இலக்கியம், அரசியல், கலை, இதழியல் உள்ளிட்ட துறைகளில் 50 ஆண்டு காலம் தீவிரமாக

செயல்பட்டவர். குடிசைப் பகுதி மக்களின் வாழ்வை தமிழ் இலக்கியத்துக்குள் முதன்முதலில் கொண்டுவந்தவர்.

* சமூக அக்கறையும் பொறுப்புணர்வும் கொண்ட படைப்பாளி. தனக்கு சரி என்று பட்டதை துணிச்சலாக வெளியிடும் தன்மை கொண்டவர். 20-ம் நூற்றாண்டின் இணையற்ற படைப்பாளிகளில் ஒருவராகப் போற்றப்பட்ட ஜெயகாந்தன் 81-வது வயதில் (2015) மறைந்தார்.

திண்ணை

ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது வழங்கி இந்திய ஜனாதிபதி ஆற்றிய உரை

HTTPS://OLD.THINNAI.COM/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81_%E0%AE%9E%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%AA%E0%AF%80%E0%AE%9F_%E0%AE%B5%E0%AE%BF/

பி.கே. சிவகுமார்



(முன்குறிப்பு: 2002-ஆம் ஆண்டுக்கான 38-ஆம் ஞானபீட விருது திரு. த. ஜெயகாந்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டபோது (27-09-2005) மாண்புமிகு குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல் கலாம் ஆற்றிய உரை. கவிஞர் சிற்பி

பாலசுப்ரமணியம் இவ்வுரையைத் தமிழ்ப்படுத்த ஜெயகாந்தனின் பதிப்பகங்களில் ஒன்றான கவிதா பதிப்பகம் இவ்வுரையைச் சிறுபிரசுரமாக – விருது வழங்கும் நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் வெளியிட்டிருக்கிறது. குடியரசுத் தலைவருக்கும், பாரதிய ஞானபீடத்துக்கும், சிற்பி பாலசுப்ரமணியத்துக்கும் கவிதா பதிப்பகத்துக்கும் நன்றிகள் சொல்லி, அவ்வுரையை இங்கே பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். குடியரசுத் தலைவரின் ஆங்கில உரையை http://presidentofindia.nic.in/scripts/sllatest1.jsp?id=602 என்ற முகவரியில் காணலாம். ஞானபீட விருது வழங்கும் விழாவின் 9 புகைப்படங்களை இவ்வுரையின் இறுதியில் காணலாம். இப்புகைப்படங்கள் குடியரசுத் தலைவரின் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை. குடியரசுத் தலைவருக்கும் அவர் இணையதள நிர்வாகிகளுக்கும் மீண்டும் என் நன்றிகள். இனி, குடியரசுத் தலைவரின் உரைக்குள். – பி.கே. சிவகுமார்)

சிந்தனையாளர்களும் சமுதாய இயக்கமும்:

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டுக்கான 38-ஆம் ஞானபீட விருதினை வழங்கும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்வுறுகிறேன். இத்தருணத்தில் பாரதிய ஞானபீடத்தின் தலைவர், அறங்காவலர்கள், தலைசிறந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன். இந்திய நாட்டின் பன்னிரண்டு மொழிகளில் இலக்கிய வளத்தைப் பெருக்கி வளர்த்திருக்கும் பல சிந்தனையாளர்களைக் கடந்த நாற்பதாண்டு காலமாக பாரதிய ஞானபீடம் கௌரவித்திருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் தலைசிறந்த இந்திய இலக்கியத்தை பாரதிய ஞானபீடம் தெரிவு செய்கிறது. பரிசு பெறும் படைப்பாளிகளின் நூல்களை ஆசிரியரின் உள்ளத்தை உணர்ந்து, இலட்சிய நோக்கோடு செயல்படும் மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் இலக்கிய மாண்பை மற்றவர்கள் உணரவும் ஏற்கவும் வாய்ப்பு ஏற்படும். இந்த ஆண்டின் சிறப்புக்குரிய விருதினைப் பெறும் திரு. ஜெயகாந்தனுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் உரைநடை இலக்கியத்தில் அவர் தனிச்சிறப்பான இடம் பெற்றவர். கடந்த ஐம்பதாண்டுகளாகத் தம் சிறுகதைகளாலும்,

குறுநாவல்களாலும், நாவல்களாலும், கட்டுரைகளாலும் மிகச் சிறப்பாகத் தமிழ்மொழியின் வளத்தைப் பெருக்கி வருபவர். 2002-ஆம் ஆண்டுக்குரிய ஞானபீட விருது அறிவிக்கப்பட்டதும் உருவாகிய ஒருமனதான பாராட்டு ஒன்றே போதும். தமிழ் இலக்கிய உலகில் திரு. ஜெயகாந்தன் பெற்றிருக்கும் நிகரற்ற உயர்வை எடுத்துக் காட்ட. இன்று – உங்களிடையே ‘சிந்தனையாளர்களும் சமுதாய இயக்கமும்‘ குறித்துச் சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

மிசோராமில் என் அனுபவம்:

சில நாட்கள் முன்பு வடகிழக்கு மாநிலங்களான சிக்கிம், அசாம், மேகாலயா, மிசோராம் ஆகிய பகுதிகளுக்கு நான் சென்றிருந்தேன். அப்போது வடகிழக்கு மாநில மொழிகள் சார்ந்த பல இலக்கியவாதிகளையும், சிந்தனையாளர்களையும் நான் சந்தித்தேன். அவர்கள் இலக்கியப் படைப்புகளையும் தந்திருக்கிறார்கள். கலை நிகழ்ச்சிகளையும் உருவாக்கி இருக்கிறார்கள். மிசோராமில் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இசைநாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்து நான் நெகிழ்ந்து போனேன். அது போன்றே சிக்கிமில் நேபாளி, பூட்டியா, லெப்ச்சா என்ற மூன்று பிரிவினரின் ஒருங்கிணைந்த கலைப் படையலையும் நான் கண்டேன். ஆற்றலும், அழகும் இசைந்திருந்த இசை, நாட்டியங்கள் ஒன்றுபட்ட மனங்களைச் சித்தரித்தது கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். அதுவும் சமுதாயத்தில் நிலவும் வேற்றுமைகளை முன்வைப்பது பொது இயல்பாக இருக்க, பன்முகப் பண்பாடுகள் ஒருமுகமாக இணைத்து வைக்கப்பட்டதில் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி.

அந்த நிகழ்வுகளில் மிக உன்னதமான ஓர் அனுபவம் மிசோராமில் ஏற்பட்டது. மிசோராமின் தலைநகரான ஐசாலிலிருந்து மாலை 4.00 மணிக்கு மேல் பொதுவாக விமானப் போக்குவரத்து நடைபெறுவது கிடையாது. ஆனால் எனக்கு ஐசாலில் இரவு 9.00 மணிவரை பணி

இருந்தது. அன்றிரவே தில்லி திரும்ப வேண்டிய அவசியமும் இருந்தது. எனவே, நம் விமானப்படையினர் அந்த இரவு நேரத்தில், விமானம் புறப்படுவதற்குத் தேவையான குறைந்தபட்ச ஏற்பாடுகளைச் செய்து முடித்திருந்தனர். விமான நிலையத்துக்கு என் குழுவினருடன் நான் வந்து சேர்ந்தேன். மாநில ஆளுநர், முதலமைச்சர், மற்ற அரசு அலுவலர் ஆகியோரும் வந்து சேர்ந்தனர். அப்போது அங்கே சூழ்ந்திருந்த இருட்டில், விமானத்தில் எரியும் விளக்கு வெளிச்சத்தை மட்டுமே உதவியாகக் கொண்டு ஓர் அரிய காட்சி நிகழ்வதை நான் கண்டேன். விமானத்தின் அருகில், பாதுகாப்பான தூரத்தில் இசைக் கருவிகளோடு ஒரு பாடகர் குழு காத்திருந்தது. என்னைக் கண்டவுடன், அவர்கள் மிசோராமின் கவிஞர் ரோகுங்கா இயற்றித் தந்திருந்த ஒரு மிக இனிய, அழகிய பிரிவுபசாரப் பாடலைப் பாடத் தொடங்கினார்கள். அந்தப் பாடலுக்குப் ‘பிரிவின் உலகம் ‘ என்று தலைப்பிடப்பட்டிருந்தது. அதன் பொருள்:

‘கனத்து விம்மும் இதயத்தோடு
....பிரிகிறோம் நாம் இப்போது
நாம் வாழும் உலகத்தில் ‘பிரிவு ‘ என்பதை
....தெய்வப் பிதாவோ விதித்து விட்டார்
ஆனால் இதனினும் சிறந்த உலகில்
....நிச்சயம் வாழவே படைக்கப்பட்டுள்ளோம்
வேதனைப் பிரிவுகள் ஏதுமில்லாத
....அழியா நகரொன்றில் வாழ்வோம் நாம் ‘

இந்தியாவின் எல்லையற்ற வாழ்வின் அழகிலும், பாடலின் உணர்ச்சி ததும்பும் இசையிலும், நம் பன்முகக் கலாசாரத்திலும், அவை ஒன்றுபடும் இந்தப் பெரிய நாட்டின் உள்ளத்தொருமையிலும் நான் நெகிழ்ந்து போனேன். பாரதிய ஞானபீடம் இந்த உண்மையை நெருங்கியுணர்ந்து, நம் அரசியல் அமைப்பின் 8-ஆவது பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகள் அனைத்திலும் சாதனை நிகழ்த்திய எழுத்தாளர்களை மதித்துப் போற்றுவது எனக்கு

மகிழ்வூட்டுகிறது. 8-ஆவது பிரிவில் சேர்க்கப்படாத மொழிகளின் சிறந்த இலக்கியங்களைக் கௌரவிக்க முடிந்தால் தனிப்பட்ட முறையில் இன்னும் மகிழ்வேன். வளர்ச்சியடைந்த இந்தியா என்பது பொருளாதார வளர்ச்சியை மட்டுமே குறிக்காது. இந்தியக் கலை, இலக்கியம், மனித நேயம், மாண்புமிக்க சிந்தனைகள் எல்லாவற்றுக்கும் மேலாக அதன் ஐயாயிரம் ஆண்டின் வளமான பாரம்பரியம் அனைத்தின் ஒன்றுபட்ட வளர்ச்சியையும் அது குறிக்கும்.

ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்:

ஜெயகாந்தனுடைய ‘ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்‘ என்ற நாவலை நான் படிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இந்த நூலை நான் முழுமையாகப் படித்திருக்கிறேன். எத்தனை பாத்திரங்கள். எத்தனை நிகழ்வுகள். சில இடங்களில் துயரத்தின் கண்ணீர். சில இடங்களில் இனிமை! இந்த நாவலில் வரும் முக்கிய பாத்திரங்களான ஹென்றி, துரைக்கண்ணு ஆகியோரின் உன்னதமான பண்புகள் இன்னும் என் நினைவில் உள்ளன. கடல்களும், நதிகளும் மட்டுமல்ல – ஒவ்வொரு துளி நீரும் தன்னளவில் முழுமையானது என்று ஜெயகாந்தன் அந்நாவலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். கண்டங்களும், நாடுகளும் மட்டுமே உலகமாகி விடுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் ஒரு உலகம்தான். உலகம் முழுவதும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வெவ்வேறு அணுக்களின் அமைப்பாக நிலவுகிறது என்பதும், அதனால் ஒவ்வொரு அணுவும் முழு உலகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதும் இதன் பொருள். இந்த இடத்தில் பாஞ்சாலி சபதத்தில் மகாகவி பாரதியார் எழுதிய சரஸ்வதி வணக்கப் பாடல் என் நினைக்கு வருகிறது. அந்தக் கவிதை இது.

‘இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
....இயல் நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களெலாம் சுழலுமென

....வானூலார் இயம்புகின்றார்
இடையின்றித் தொழிற்புரிதல் உலகினிடைப்
....பொருட்கெல்லாம் இயற்கையாயின்
இடையின்றிக் கலைமகளே நினதருளில்
....எனதுள்ளம் இயங்கொணாதோ ? '

இதன் பொருள் இயற்பியலாளர் அணுக்காள் ஓயாது இயங்கும் என்கின்றனர். வானியலார் ஒவ்வொரு கிரகமும், அதன் நட்சத்திரங்களும் பால்வீதியும் நிரந்தரச் சுழற்சியில் உள்ளன என்கின்றனர். நிரந்தர இயக்கமே உலகனைத்துமுள்ள பொருள்களின் தன்மையெனில், அன்னை சரசுவதியே! என் மனமும் சுறுசுறுப்பாய் என்றும் இயங்க அருள் தா!

ஜெயகாந்தன் பாரதியைத் தன் குருவாக ஏற்றுக் கொண்டவர்.

ஒரு தனிமனிதன் என்ற அணுத்திரளில் ஜெயகாந்தன் உலகத்தைக் காண்கிறார். மகாகவியோ அணுவுக்குள் தொடரும் நிரந்தரப் பரிமாணத்தைத் தனிமனிதன் பிரதிபலிக்க வேண்டும் என்கிறார். அதாவது ஒரு கணத்திலிருந்து மறுகணத்துக்கு வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி என்பது பொருள்.

ஆசிரியர்களின் ஆசிரியர்:

'ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் ' என்ற கட்டுரைத் தொகுதியின் முன்னுரையில் பேசப்பட்டுள்ள ஜெயகாந்தனின் வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் என் இதயம் கவர்ந்தது.

'தியாகமும் ஞானமும் படைத்த நமது சுதந்திரப் போராட்ட வீரர்களும், சோஷலிஸச் சித்தாந்திகளும் ஒன்றுபட்டு ஒரு புதிய உலகத்தை வார்க்க வேண்டிய தருணம் இன்னும் வாய்க்கவில்லையா என்றெல்லாம் ஏங்கித் தவிப்பதே ஓர் இலக்கிய இதயம். இந்த ஏக்கத்தின் பரிபாஷைப்புலம்பலே எனது கதைகள். எனவேதான், எந்தத் துறையில் என்னைப் பிரஷ்டனாகக் கருதினாலும், இலக்கியச் சந்நிதானத்தில்,

ஆதிசங்கரருக்கு வாய்த்த சண்டாளன் மாதிரி நானே குருவாகி நிற்பேன். இது என் விருப்பமன்று; விதி. '

எத்தனை அழகான, உருக்கமான அறிவிப்பு! இதனைப் படித்தபோது என் கண்களில் கண்ணீர் பொங்கியது. ஏனெனில், எங்கும் நம்பிக்கை வறட்சியையும், விதி வலிது என்ற மனப்பாங்கும் நிரம்பி இருப்பதைக் காண்கிறேன். ஆனால், நம்பிக்கை அவற்றை அறைகூவலிட்டு எதிர்கொள்கிறது. இப்படித்தான் இலக்கியம் நம்மை மேன்மைப்படுத்துகிறது. ஜெயகாந்தன் இவ்வகையில் சமுதாயத்தின் மனச்சாட்சிக் காவலர் என்ற தகுதிக்குரியவர் என்பதில் ஐயமில்லை.

தன்னையும் கடந்து செல்லுதல்:

ஜெயகாந்தன் குறிப்பிட்டிருப்பதைப் போல அவருடைய எழுத்துக்களின் மொத்தக் குறிக்கோளும் காலத்தின் தேவைக்கேற்ற வளர்ச்சியை அடையும் பொருட்டு சமுதாயத்தை எழுச்சி கொள்ள வைப்பதுதான். கடந்த காலத்தில் தேக்கத்தில் ஆழ்ந்துவிட்ட நம் தேசம், அதன் பிடியிலிருந்து உதறி எழுந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இது எவ்வளவு பொருத்தமான இலட்சியம் என்பதை நாம் காண முடியும். இன்னொரு இடத்தில் ஜெயகாந்தன் கூறுகிறார்.

'இலக்கியத்தில் வெற்றி என்பது காலத்தை வெல்வது; உங்களைக் கடந்து செல்வது என் வெற்றி. நீங்களே உங்களைக் கடந்து செல்வதற்கு உதவி செய்வது இலக்கியத்தின் வெற்றி. அதற்கு இன்னொரு பெயர் வளர்ச்சி. '

தனிமனிதனுக்கும், எழுத்தாளனுக்கும், மனித குலத்துக்கும் விடுக்கப்பட்ட அழகான செய்தி இது. தன் மக்களாலும், உயிரினப் பன்மையாலும், இயற்கை வளத்தாலும் ஒரு நாடு செல்வமுடையதாக அமைகிறது. ஆனால், ஒரு நாட்டின் மகுடமான பெருமை, காலத்தைக் கடந்து செல்லவும், மாற்றங்களைச் சமுதாயம் ஏற்கவும் செய்கிற அதன் சிந்தனையாளர்களாலேயே உண்டாகிறது. சமுதாய மாற்றத்தை

விளைவிக்கிற அத்தகைய சிந்தனையாளர்களில் ஒருவர் நம் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தன் – என் நினைவுகள்:

என் இளம் வயதில் விடுமுறைக் காலங்களில் என் நண்பர்களோடு, குறிப்பாக இராமநாத சாஸ்திரிகளோடு இராமேசுவரத்தில் ஜெயகாந்தன் சிறுகதைகளைப் படித்த இனிய நினைவுகள் இன்னும் என்னிடம் உண்டு. என்னுடைய தந்தையாரின் நண்பரும், வேதவிற்பன்னரும், இராமேசுவரம் கோயில் புரோகிதருமாக இருந்த பட்சி இலட்சுமண சாஸ்திரிகளின் மகன் இராமநாத சாஸ்திரி. நாங்கள் தொடக்கப் பள்ளிக்கால வகுப்புத் தோழர்கள். 1968-இல் நான் விடுமுறையில் ஊருக்குப் போனபோது கடலைப் பார்த்து அமைந்த என் வீட்டுத் திண்ணையில் சந்தித்தோம். அப்போது 1968-ஆம் ஆண்டு ஆனந்த விகடன் தீபாவளி மலரை நான் அவருக்குப் பரிசாக அளித்தேன். அப்போது படித்த ‘அக்ரஹாரத்தில் பூனை‘ என்ற கதை என் ஞாபகத்தில் உள்ளது. இரட்டைப் பண்பு கொண்ட ஒரு இளைஞனைப் பற்றியது அந்தக் கதை. வெளியே அமைதியானவன் போல் தோற்றமளித்தாலும் உள்ளே குறும்புக் குணமும், பயங்கர இயல்பும் அவனிடம் இருந்தன. பூச்சிகளையும், விலங்குகளையும் துன்புறுத்தும் வெறி அவனுக்கு இருந்தது. அந்த அக்ரஹாரத்தில் வீடுகளுக்குள் புகுந்து ஒரு பூனை தொல்லை கொடுத்து வந்தது. அந்தப் பூனையை ஒழிக்க அந்தச் சிறுவன் பொறுப்பேற்றுக் கொண்டான். அதனைத் துன்புறுத்தும் பொருட்டு – ஒரு சாக்குப் பையில் தூக்கிப் போட்டுக் கொண்டான். ஆனால், அவன் மனம் மாறுகிறது. பூனையைத் துன்புறுத்த வேண்டாமென்று ஒரு கசாப்புக் கடைக்காரர் சொன்னதை அவன் கேட்டுக் கொள்கிறான். அவர் அறிவுரை அவனுக்குப் புதிய வெளிச்சமாகிறது. அவன் சிந்தனைப்

போக்கில் மாறுதல் ஏற்படுகிறது. எத்தனை அழகான மாறுதல்! அந்த மாறுதல் நம் மனங்களிலும் வந்து நுழைந்து விடுகிறது.

கவிஞர் ஜெயகாந்தன்:

ஜெயகாந்தன் கவிதையும் எழுதுகிறார். அவருடைய திரைப்படங்களுக்கு அவரே பாடல்கள் எழுதியுள்ளதாகவும் அறிகிறேன். அண்மையில் அவருடைய வெண்பா ஒன்றைப் படிக்க நேர்ந்தது. அவர் கூறுகிறார்.

> 'பட்டேன் பலதுயரம் பாரிலுள்ளோ ரால்வெறுக்கப்
> பட்டேன், படுகின்றேன், பட்டிடுவேன் – பட்டாலும்
> நாட்டுக் குழைக்குமெனை நாடேவெறுத்திட நான்
> வீட்டுக்கும் வேண்டா தவன்'

ஜெயகாந்தனின் இன்னொரு பரிமாணத்தை இப்பாடல் காட்டுகிறது. பெரும்பான்மையோர் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்து அவர் கவலைப்படுவதில்லை அல்லது தன் வாசகர்கள் அவர் என்ன கூறவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களோ அதுகுறித்தும் கவலைப்படவில்லை. எழுத்தாளனுக்கு அவனுக்கே உரிய பணி இருக்கிறது. இது அவருடைய சிந்தனைச் சுதந்திரத்தைக் காட்டுகிறது. கவி மனத்தின் அகத்தைப் புலப்படுத்துகிறது. சமுதாய மாற்றம் இனி உருவாக வேண்டுமே என்ற எண்ணத்தை முன்வைக்கிறது.

வாழ்வின் எதார்த்தம் நோக்கி:

புகழ்பெற்ற அவருடைய முன்னுரைகளில் ஒன்றில் இந்திய மனத்தின் நாடி பிடித்துப் பார்க்கிறார். பொதுவாக நம் மனம் மென்மையானது. வாழ்வில் நல்ல செய்திகளையே நாம் பெரிதும் கேட்க விரும்புகிறோம். அதானால்தான் போலும், நாம் இராமாயணக் கதை சொல்லும்போது சீதா கல்யாணம் அல்லது பட்டாபிஷேகத்தில் அதனை முடித்து வைக்கின்றோம். இராமன் சரயு நதியில் மூழ்கி இறந்தது குறித்தோ, சீதையைப் பூமி விழுங்கியது குறித்தோ மக்கள் கேட்க விரும்புவதில்லை. ஆனால், வாழ்க்கையோ நன்மையும், தீமையும்,

இன்பமும், துன்பமும், ஏற்றமும், இறக்கமும் கொண்டதாகவே இருக்கிறது. ஒன்றின் மதிப்பு மற்றொன்று இல்லாமல் தெளிவாவதில்லை. ஒரு படைப்பாளன் கூரிய பார்வையால் பாத்திரங்களின் பண்புகளை ஈவிரக்கமின்றி ஆராய வேண்டுமென்றும், இதுகுறித்து உணர்ச்சி வசப்படலாகாது என்றும் ஜெயகாந்தன் கூறுகிறார். எனவே, வாசகர்கள் ஒரு நாவல் அல்லது நாடகத்தில் வரும் பாத்திரத்தின் மீது அதீதப் பரிவோ, வெறுப்போ கொள்வது இலக்கியத்தில் புலப்படுத்தப்படும் வாழ்க்கையை அவர்கள் புரிந்துகொள்ள மறுப்பதன் அடையாளமே ஆகும்.

அறிவுக் களஞ்சியம்:

வாசகர்களின் மனங்களில் ஒரு பொறியைப் பற்ற வைப்பதே திறமையான படைப்பாளன் சமுதாயத்துக்கு அளிக்கும் கொடை. ஏறத்தாழ இரண்டாயிரம் பக்கங்கள் அமைந்த சிறுகதைத் தொகுதிகளைக் கவிதா பப்ளிகேஷன் வெளிக் கொனர்ந்திருக்கிறது. வர்த்தமானன் பதிப்பகம் அவருடைய நாவல்களை ஐந்து தொகுதிகளாக அளித்திருக்கிறது. குறுநாவல்கள் மீனாட்சி பதிப்பகத்தால் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவையனைத்தும் வாசகர்களுக்கு நல்ல துணைவர்களாக இருக்கும். நல்ல நூல்களின் மதிப்பைக் குறித்து இங்கே சிறிது சொல்ல விரும்புகிறேன்.

நூல்கள் நம் துணைவர்கள்:

ஒரு நல்ல புத்தகத்தை அறிந்து கொள்வதும், உரிமை கொள்வதும் வாழ்வின் இனிய வரமாகும். புத்தகம் உங்கள் நிரந்தர நண்பனாகி விடுகிறது. சிலசமயம் நமக்கு முன்னே பிறந்த புத்தகங்கள், நம் காலத்திலும் நமக்கு வழிகாட்டி, நமக்கு அடுத்த தலைமுறைகளையும் வாழ்விக்க வல்லவை. 1950-களில் சென்னை மூர் மார்க்கெட் பழைய புத்தகக் கடையில் 'The Light from many lamps ' என்ற புத்தகத்தை நான் வாங்கினேன். ஒரு கட்டுரைப் போட்டியில் பரிசாக மு.

வரதராசனாரின் 'திருக்குறள் – தெளிவுரை ' எனக்குக் கிடைத்தது. இந்த இரண்டு நூல்களும் என் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டன. ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக அவை என் தோழர்கள். பலமுறை கட்டமைப்புச் செய்யும் அளவுக்கு அவை படித்துப் படித்துப் பழையதாகி விட்டன. எப்பொழுதாவது எனக்குச் சிக்கல்கள் எழுந்தால், இந்த நூல்கள் தந்த மகத்தான மனங்களின் அனுபவங்களால் என் கண்ணீர் துடைக்கப்படுகிறது. மகிழ்ச்சி நம்மை இன்பத்தில் மூழ்கடிக்கிற போதோ, அவை நம் மனதை மெலிதாய் வருடி நம்மைச் சமநிலைக்குக் கொண்டு வருகின்றன. அடிப்படையில் புத்தகங்கள் அமரத்துவம் வாய்ந்தவை. நிச்சயமாக ஜெயகாந்தனைப் போன்ற இந்திய எழுத்தாளர்களின் நூல்கள் உலகின் கவனத்தைக் கவர வல்லவை.

(நிறைவாக) வெற்றி கொள்ள முடியாத ஆன்மா:

நமது பூமி என்ற கிரகத்தில் எத்தனையோ நாகரிகங்கள் எழுந்தன. ஆனால் அவற்றுள் மாற்றங்களை அடையாளம் காணும் உயர் சிந்தனைத் திறனும், எதிர்காலத்தை அறியும் பார்வைத் திறனும், செயல்திறம் மிக்க நாகரிகத்தை வளர்க்கும் திறனும் கொண்ட சில நாகரிகங்களே உயிர் வாழ்கின்றன. இந்த ஆற்றலை வழங்குபவை இலக்கியம், கவிதை, தர்க்கம் ஆகியவைதான். எடுத்துக்காட்டாக பண்டைய தத்துவ ஞானிகளும் சரி, பிற்காலத்தில் வந்த அறிவியல் தொழில்நுட்ப அறிஞர்கள், பொருளாதர மேதைகள், சமூக இயலாளர்கள் ஆயினும் சரி, நம் நாகரிகத்தை ஒன்றுபட்டு வளர்த்துள்ளனர். நம் இந்திய நாகரிகம் பண்பாட்டுப் பன்முகத் தன்மையைச் சீரிய மாற்றங்களோடு காத்து வந்திருக்கிறது. இதனால்தான் பண்பாட்டுப் பன்மை, மொழிப் பன்மை, சமயப் பன்மை கொண்ட ஒருமைப்பாட்டையும், கோடிக்கணக்கான மக்களையும் கொண்டதாக நம் சமூகம் வளர்ந்திருக்கிறது. நமது மாபெரும் தீர்க்கதரிசிகளால் மகாபாரதம் போன்ற இதிகாசங்களையும், திருக்குறள், கபீர்வாணி, நாராயணீயம் போன்ற செவ்வியல்

படைப்புகளையும் நம் நாடு நீண்ட மரபுச் செல்வமாகப் பெற்றிருக்கிறது. அத்தகைய மரபின் தகுதி மிக்க புதிய படைப்பாளிகளைப் பல மொழிகளிலும் அடையாளம் கண்டு ஞானபீடம் அந்த இலக்கிய மேன்மைகளைக் கௌரவிக்கிறது. ஞானபீடம் பரிசு தந்து கௌரவிக்கும் ஜெயகாந்தன் படைப்புகளையும், நம் நாட்டின் பிற படைப்புகளையும் நான் போற்றுகிறேன். இலக்கிய வளம் பெருக அளிக்கப்படும் இப்பரிசு ஓர் உன்னத அடையாளமாக ஓங்கி நிற்கிறது.

சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் நிரம்பிய நம் நாட்டின் இலக்கிய வளம் நம் இளைஞர்களிடையே ஒளிமிகுந்த தலைவர்களை உருவாக்கும் என நான் நம்புகிறேன். விசால மனமும், மனிதகுலம் பற்றிய சிந்தனையும், எந்த அவநம்பிக்கையையும், பலவீனத்தையும் வெற்றி கொள்ளும் ஆன்ம பலத்தையும் இளம் தலைமுறைக்குத் தம் எழுத்துக்களால படைப்பாளிகள் வழங்க முடியும். இது படைப்பாளிகளின் கடமை மட்டுமல்ல, மனித குலத்தைச் சோதனைகளிலிருந்து வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும் புனித வாய்ப்பாகும்.

இன்று திரு. த. ஜெயகாந்தன் அவர்களுக்கு 2002-ஆம் ஆண்டிட பாரதிய ஞானபீட விருதினை அளிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். தன் கூரிய பார்வையால் இன்று நம் சமுதாயம் சந்தித்துக் கொண்டிருக்கும் மாற்றங்களை அடையாளம் காணவும், வளர்ச்சியை நோக்கிய நம் இளைஞர்களின் சிந்தனைப் போக்கில் ஒரு வேகத்தை உருவாக்கவும், அவர் பணி தொடருமாக! வளரும் பாரதத்துக்கு அது விலைமதிக்க முடியாத பங்களிப்பாக இருக்கும்.

அனைவருக்கும் இறையருள் சித்திக்குமாக.

ஜெயகாந்தன் அவர்களின் ஏற்புரை:

வணக்கத்துக்குரிய இந்திய ஜனாதிபதி அவர்களே, மரியாதைக்குரிய ஞானபீடத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய அனைத்திந்திய சகோதர எழுத்தாளர்களே, பெருமைமிகு இவ்விழாவினைச் சிறப்பிக்க வந்துள்ள இலக்கிய அபிமானிகளே, நண்பர்களே, உங்கள் அனைவரையும் நன்றிப் பெருக்குடன் வணங்குகிறேன்.

இந்திய இலக்கியங்களைக் கௌரவிக்கும் மிக உயர்ந்த விருதான ஞானபீட விருதினை இவ்வாண்டு தமிழ் மொழிக்கும் அதன் சார்பில் எனக்கும் வழங்கியுள்ள ஞானபீட நிறுவனத்திற்கும், தேர்வுக் குழுவினருக்கும் தமிழ் மொழியின் சார்பில் நன்றி கூறி, இப்பெருமையையும் விருதினையும் பணிவுடன் ஏற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

என்றுமுள்ள தென்தமிழ் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ள இந்த ஆண்டில், இந்தியக் குடியரசின் தலைவராக வீற்றிருக்கும் ஒரு தமிழரின் திருக்கரத்தால் இவ்விருதினைப் பெறுவது எனது மகிழ்ச்சியை மும்மடங்கு ஆக்குகிறது.

இந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் என்னுடன் பகிர்ந்து கொள்ளும் சான்றோருக்கும் சக எழுத்தாளர்களுக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் எனது வாசகப் பெருமக்களுக்கும் என்றென்றும் எனது நன்றி உரித்தாகுக!

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திருநாடு!

வந்தே மாதரம்...!

நன்றி: இந்தியக் குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல் கலாம், பாரதிய ஞானபீடம், கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம், கவிதா பப்ளிகேஷன்.

ஞானபீட விருது புகைப்படங்கள்:

இப்புகைப்படங்கள் அனைத்தும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்டவை. குடியரசுத் தலைவருக்கும் அவர் இணையதள நிர்வாகிகளுக்கும் இதற்காக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

https://www.tamilonline.com/thendral/article.aspx?aid=1449

https://edubilla.com/award/jnanpith-award/jayakanthan/

காணொளிகள்

01] **ஜெயகாந்தன் அவர்களின் சுவை மிகுந்த பேச்சு**
https://www.youtube.com/watch?v=jPJWXUeq5Jw [1:12:16]
02] **நான் இருக்கிறேன்| JK | ஜெயகாந்தன்**
https://www.youtube.com/watch?v=KO4yw7wHyXY [16:09]
03] **வாய்ச்சொற்கள் - ஜெயகாந்தன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=6TkJnFtLozo [21:30]
04] **நிக்கி - ஜெயகாந்தன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=c7G19ND-k3Y [14:51]
05] D Jayakanthan, Tamil directed by Sa Kandasamy
https://www.youtube.com/watch?v=D46_YKbYw1I [30:57]

(😊)(😊) ஜெயகாந்தன் (😊)(😊)